Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை - 30 ரூபா | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :183 வைகாசி 17ஆம் நாள் சனிக்கிழமை 30 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2051




# தமிழர் விடயங்களில் அரசுக்கு ஒத்துழைப்பு

*கூட்டமைப்பின் கூட்டத்தில் தீர்மானம்;*
*தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை தெரிவிப்பு*



**கொழும்பு, மே 30**

**தமிழ் மக்கள் விடயங்கள் தொடர்பில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படுவது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

02 ▶

## கடவுளின் தண்டனையாம் கொரோனா!

கொழும்பு, மே 30
கொரோனா வைரஸால் மேற்கு நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதில் மகிழ்ச்சியடைவதாக அறிவித்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ்., கொரோனாத் தொற்று நோய் கடவுளிடமிருந்து கிடைத்த தெய்வீகத் தண்டனை என்று தெரிவித்துள்

13 ▶

## கத்திக்குத்தில் மூவர் காயம்!

வவுனியா, மே 30
வவுனியாவில் நடந்த கத்திக்குத்து மற்றும் வாள்வெட்டுச் சம்பவங்களில் 3 பேர் காயமடைந்துள்ளனர். அவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

13 ▶

## பொதுத் தேர்தல் பெரும் சவால்!!!

யாழ்ப்பாணம், மே 30
நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்பு அதிகளவு ஆசனங்களைக் கைப்பற்றுவது பெரும் சவாலானது என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித்தலைவர்கள், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எடுத்துரைத்துள்ளனர்.

13 ▶

## கொரோனா 1,558

கொழும்பு, மே 30
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 28 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொரோனா தொற்றியவர்க

13 ▶

## முல்லைத்தீவில் தனிமைப்படுத்தப்பட்ட ஒருவருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், மே 30
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.

13 ▶

## பதவியைத் துறக்க சுமந்திரன் மறுப்பு!

*விரும்பினால் விலக்குங்கள் என சம்பந்தன் முன் தெரிவிப்பு*

கொழும்பு, மே 30
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் பொறுப்பிலிருந்து நான் விலக மாட்டேன். விரும்பினால் கூட்டமைப்பு என்னை விலக்

02 ▶

## தேர்தலுக்குத் தயாராகிறது தேர்தல்கள் ஆணைக்குழு

*வாக்குச்சீட்டு அச்சிட எந்நேரமும் தயாராக இருக்குமாறு அரச அச்சகத்துக்கு அறிவிப்பு*

கொழும்பு, மே 30
16 மில்லியன் வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கு எந்த நேரத்திலும் தயார் நிலையில் இருக்குமாறு அரச அச்சகத்துக்கு, தேர்தல் ஆணைக்குழு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.
பொதுத்தேர்

02 ▶

## நுவரெலியா மாவட்டத்தில் இன்று ஊரடங்கு

கொழும்பு, மே 30
இன்று சனிக்கிழமை நுவரெலியா மாவட்டத்தில் முழு நாளும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்று ஜனாதிபதி

13 ▶

## இன்னும் முறையிடவில்லை!

யாழ்ப்பாணம், மே 30
தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்ததாக வெளியான செய்தி தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யவதற்குத் தீர்மானிக்கப்பட்டபோதும் இதுவரையில் அது மேற்கொள்ளப்படவில்லை என்று தெரியவருகின்றது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தொடர்பில் அரசமைப்பு பேரவையிடம் முறையிடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தாக,

02 ▶

## ரணில் அணியைச் சரிக்க சஜித் அணியினர் வியூகம்

*ஏட்டிக்குப் போட்டியாக வருகிறது நம்பிக்கையில்லாப் பிரேரணை*

கொழும்பு, மே 30
ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களைக் காட்டிக் கொடுத்து அரசுடன் இணைந்து அரசியல் இலாபம் தேடுகின்ற ஐ.தே.கவைச் சேர்ந்தவர்களுக்கு எதி

02 ▶

## குளோரின் விற்பதாக நடித்து வீடுகளில் திருடியோர் கைது



வவுனியா, மே 30
வீடுகளில் திருடிய குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், முச்சக்கர வண்டி ஒன்று கைப்பற்றப்பட்டுள்

13 ▶

## நள்ளிரவில் வீடு புகுந்து நகை, பணம் கொள்ளை

யாழ்ப்பாணம், மே 30
யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாயில் நள்ளிரவு வேளை வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள் நகை, பணம் என்வற்றைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ள

02 ▶

## அரசியல் கைதிகள் விவகாரம்: கோத்தா, மஹிந்தவுடன் பேச்சு

யாழ்ப்பாணம், மே 30
தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்புத் தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சுக்களை நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தீர்மா

02 ▶

## 5, 6ஆம் திகதிகளில் 'பார்களுக்கு' பூட்டு!

கொழும்பு, மே 30
நாடு முழுவதும் உள்ள மதுபானசாலைகள் எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் மூடப்படும் என்று மதுவரித்

13 ▶

## பேஸ்புக்கில் அவதூறு; சுகாஸ் முறைப்பாடு!

யாழ்ப்பாணம், மே 30
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் க.சுகாஸ் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.
தனது பெயரைக் குறிப்பிட்டு அவதூறு பரப்பும் வகையில் முக

02 ▶

## பேஸ்புக் காதலிக்காக வந்த இளைஞரின் மீது தாக்குதல்!

*கைபேசி, பணத்தைப் பறித்து தப்பினர் இனந்தெரியாதோர்*

யாழ்ப்பாணம், மே 30
இளைஞர் ஒருவரைத் தாக்கிய இனந்தெரியாத குழுவினர், இளைஞரிடம் இருந்த கைபேசி, பணத்தைப் பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளது.

02 ▶

## தமிழர்...

இந்தத் தகவலை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான கூட்டம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் அவரின் கொழும்பு இல்லத்தில் இன்று (நேற்று) மாலை நடைபெற்றது. அதில் தமிழரசுக் கட்சியின் சார்பில் நானும், புளொட் சார்பில் அதன் தலைவர் த.சித்தார்த்தன் மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டோம். ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் உடல்நலக் குறைவால் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இதன்போது நேற்று (நேற்றுமுன்தினம்) நடைபெற்ற கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் மீண்டும் பேசினோம்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விவகாரம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தினோம். பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் கூட்டமைப்பால் கையளிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் பட்டியல் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், அவர்களின் விடுதலை தொடர்பில் விரைவில் ஒரு முடிவு வரும் எனவும் நீதி அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா தன்னிடம் தெரிவித்தார் என்று சுமந்திரன் இதன்போது தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய கொரோனா நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தவுடன் காணி விடுவிப்பு தொடர்பில் பிரதமரை மீண்டும் சந்தித்துப் பேசுவது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

உயர்நீதிமன்றத் தீர்ப்பு வெளிவந்த பின்னர் நாடாளுமன்றத் தேர்தலுக்கான கூட்டமைப்பின் அறிக்கையை எவ்வாறு தயாரிப்பது தொடர்பில் மீண்டும் கூடி பேசுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மிகவும் முக்கியமாக தமிழ் மக்கள் விடயங்கள் தொடர்பில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படுவது எனவும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது- என்றார். (எ-22)

## பதவியைத்...

கிக் கொள்ளட்டும் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் நேற்று மாலை கொழும்பிலுள்ள கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்றது. இதன்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று அறிய முடிகின்றது.

அண்மையில் சிங்கள ஊடகமொன்றில் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்து, தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் விதமாக அமைந்திருந்ததாக பெரும்பாலான மக்கள் உணர்ந்தனர். அது குறித்த கடுமையான விமர்சனங்களும் எழுந்திருந்தன.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் இரா.சம்பந்தனின் இல்லத்தில் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பில், எம்.ஏ.சுமந்திரன் விவகாரமும் விவாதிக்கப்பட்டது. இதன்போது கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியில் இருந்து சுமந்திரன் தானாகவே விலகுவேதே பொருத்தமான நடவடிக்கை எனப் பங்காளிக் கட்சித் தலைவர்கள் சம்பந்தனிடம் எடுத்துரைத்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய சந்திப்புக்கு எம்.ஏ.சுமந்திரனும் அழைக்கப்பட்டிருந்தார்.

சுமந்திரனைப் பதவி விலக்க வேண்டும் என்று நாம் தனிப்பட்ட காரணங்களுக்காக வலியுறுத்தவில்லை, ஆனால், அவராக கூட்டமைப்பின் பேச்சாளர் பொறுப்பைத் துறக்க வேண்டும் என்று நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் வலியுறுத்திய செல்வம் அடைக்கலநாதன், நேற்றைய சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை. அவர் திடீர் உடல்நலக் குறைவால்நேற்றையகூட்டத்தில்கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

"சுமந்திரனைப் பேச்சாளர் பொறுப்பிலிருந்து நீக்க வேண்டுமென நாம் விரும்பவில்லை. ஆனால், அவர் தனிப்பட்ட கருத்துக்களைத் தவிர்த்து, மக்களின் உணர்வுகளைப் புரிந்து பேச வேண்டும்" என்று நேற்றைய கூட்டத்தில் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அதை ஆமோதித்த இரா.சம்பந்தன், சுமந்திரனின் சர்ச்சைக்குரிய பேட்டி வெளியான பின்னர் தன்னுடனும் பலர் பேசியதாகக் குறிப்பிட்டார். அந்தப் பேட்டி கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் தாக்கத்தைச் செலுத்தும் எனப் பரவலாகத் தனக்குத் தெரிவிக்கப்பட்டது எனவும் சம்பந்தன் கூறினார்.

"தமிழ் அரசியல் நெருக்கடியான சூழலில் இருக்கும் இன்றைய வேளையில் ஒவ்வொருவரும் பொறுப்பான முறையில் கதைக்க வேண்டும். மக்களின் உணர்வுகளைக் காயப்படுத்தாமல் பேச வேண்டும்" என்று இரா.சம்பந்தன் ஆலோசனை தெரிவித்தார்.

"கூட்டமைப்பின் பேச்சாளர் பொறுப்பிலிருந்து நான் விலக மாட்டேன். விரும்பினால் கூட்டமைப்பு என்னை விலக்கிக் கொள்ளட்டும்" என்று எம்.ஏ.சுமந்திரன் இதன்போது தெரிவித்துள்ளார்.

எனினும், "இது மோதல் களமல்ல. அனைவரும் ஒற்றுமையாக செயற்பட்டாலே கூட்டமைப்பினால் எதையாவது செய்ய முடியும். அனைவரும் தவறுகளைப் புரிந்துகொண்டு, முன்னோக்கிச் செல்ல வேண்டும்" என்று இரா.சம்பந்தன் குறிப்பிட்டார்.

செல்வம் அடைக்கலநாதனின் உடல் தேறியதும், அடுத்த வார இறுதியில் மீண்டும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கூடுவது என நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்றுள்ளது.

அதேவேளை எம்.ஏ.சுமந்திரன் விடயம் தொடர்பாகக் கூட்டத்தில் பேசப்பட்ட வேறு சில விடயங்களை ஊடகங்களுக்குத் தெரிவிப்பதில்லை என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்றும் தெரியவருகின்றது. (எ-22)

## தேர்தலுக்கு...

தல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அவை தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியானதும், புதிய தேர்தல் திகதியை அறிவிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்நிலையிலேயே அரச அச்சகத்திடம் இந்தக் கோரிக்கையை தேர்தல் ஆணைக்குழு விடுத்துள்ளது.

இது தொடர்பில் அரச அச்சக அதிபர் கங்காணி லியனகேவிடம் வினவியபோது, இதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன என்று குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் 19 வைரஸ் காரணமாக வாக்குச்சீட்டுகளை அச்சிடும்போது சில புதிய நடைமுறைகளை கடைபிடிக்கவேண்டியுள்ளது என்றும், கொரோனாவில் இருந்து பாதுகாத்துக்கொள்வது தொடர்பில் அறிவுறுத்தல்கூட அதில் உள்ளக்கப்படலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் ஏப்ரல் 25 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் கொரோனா வைரஸ் பரவலால் அது ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் ஜூன் 20 ஆம் திகதி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அத்தினமும் பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,44)

## ரணில்...

ராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று ஒன்றுகூடிய ஐ.தே.க. மத்திய செயற்குழு உறுப்பினர்கள் 66 பேரில், 40 பேர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டுள்ளனர். இவர்களாலேயே ரணில் அணியினருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அரசுடன் கொடுக்கல் வாங்கல் 'டீல்'களில் ஈடுபட்டுவரும் ஐ.தே.கவைச் சேர்ந்த குழுவினருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

"ஐக்கிய தேசியக் கட்சி குழுவின் மோசடியான செயற்பாடுகளால், கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளனர். மேற்படி குழுவினர் அரசுடன் இணைந்து 'டீல்' செய்து கொண்டு கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டுள்ளனர். இவை தொடர்பிலே அந்தக் குகுவினருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது" எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பொதுத் தேர்தலின் பின்னர் ஐ.தே.கவைப் கைப்பற்றிக் கொண்டுள்ள குழுவிடமிருந்து கட்சியை மீட்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (எ-22)

## நள்ளிரவில்...

னர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

மூளாய் வீதி, கண்ணகை அம்மன் கோயிலடிப் பகுதியில் உள்ள வீடொன்றிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது. அந்த வீட்டில் வயது முதிர்ந்த தம்பதியர் வசிக்கின்றனர். நள்ளிரவு வேளை வீட்டுக்குள் நுழைந்த 4 பேர் கொண்ட கும்பல் அவர்களை அச்சுறுத்தி நகை, பணத்தைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ)

## பேஸ்புக்கில்...

நூலில் பதிவிட்டமை தொடர்பாகவே அவர் முறைப்பாடு செய்துள்ளார். புலம்பெயர் நாட்டில் வசிக்கும் ஒருவருக்கு எதிராகவே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளரான புலம்பெயர் நாட்டில் வசிக்கும் ஒருவர் முகநூலில் அவதூறு ஏற்படுத்தும் வகையில் பதிவு இட்டுள்ளார் என்று க.சுகாஸ் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-26)

## இன்னும்...

கொழும்பைத் தளமாகக் கொண்ட தமிழ் அரச ஊடகம் ஒன்று இணையத்தளத்தில் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்தியைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய மறுத்திருந்தார். இந்தச் செய்தி தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டத்திலும் ஆராயப்பட்டிருந்தது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இருவரும், மேற்படி செய்தி தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்ய வேண்டும் எனத் தெரிவித்திருந்தனர். ஆணைக்குழுவின் தவிசாளர், சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனத்துக்கு கடிதம் அனுப்புவதாகக் குறிப்பிட்டார். அதனை ஏற்க மறுத்த உறுப்பினர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

வேறுவழியின்றி தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளரும் அதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார். ஆனால் நேற்றுமுன்தினம் மாலை வரையில் முறைப்பாடு செய்யப்படவில்லை. (ஒ.5)

## பேஸ்புக்...

முகப்புத்தகம் ஊடாகப் பழகிய தனது காதலியைச் சந்திக்க வந்தபோதே இளைஞர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலில் இளைஞருக்குத் தலையில் காயம் ஏற்பட்டுள்ளது. அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இளைஞருக்கு முகநூல் ஊடாகப் பெண் ஒருவருடன் தொடர்பு ஏற்பட்டு, இருவரும் உரையாடியுள்ளனர். நேற்று மதியம் அவர்கள் சந்திப்பதற்குத் திட்டமிட்டனர். இவர்கள் யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் உள்ள ஒரு குளிரகத்தில் சந்திக்க முடிவெடுத்து, இளைஞர் அங்கு வந்து காத்திருந்துள்ளார்.

அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த 3 பேர் தங்களைப் பொலிஸார் என்று கூறியதுடன், விசாரணை செய்ய வேண்டும் என்று அந்த இளைஞரை மோட்டார் சைக்கிளில் இழுத்து ஏற்றிச் சென்றுள்ளனர். அவர்கள் அந்த இளைஞரைக் கொக்குவில் பொற்பதிப் பகுதிக்குக் கொண்டு சென்று, அங்குள்ள பிள்ளையார் ஆலயம் ஒன்றின் பின்புறம் வைத்துத் தாக்கியுள்ளனர்.

இளைஞரிடம் இருந்த கைபேசி, பணம் என்பற்றையும் பறித்துள்ளனர். அவர்களிடம் இருந்து தப்பியோடிய இளைஞர் அங்குள்ள வீடொன்றின் முன்பாக விழுந்துள்ளார். இளைஞரைத் தாக்கியவர்கள் சிறிது நேரத்தின் பின்னர் அங்கிருந்து சென்றுள்ளனர். தலையில் காயம் ஏற்பட்ட நிலையில் இளைஞர், அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களின் உதவியுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (எ-20)

## அரசியல்...

னித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்கள் கூட்டம் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி எழுதிய கடிதத்தை சமர்ப்பித்தார். அது தொடர்பில் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவுடன் சந்திப்பு நடத்தப்பட்டு, அரசியல் கைதிகளின் பெயர்ப் பட்டியல் வழங்கப்பட்டிருந்த நிலையில், இது தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷமற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ இருவரையும் விரைவில் சந்தித்துக் கலந்துரையாடுவது என்று இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## IT JOB OPPORTUNITY FOR A NORTH AMERICAN FIRM IN JAFFNA

INVEXIUM

A North American Software company is planning to set up operations in Jaffna, Sri Lanka and looking for candidates who can speak very good English and know development in Microsoft development stack are encouraged to send their CV with expected salary to :
HRJaffna@Invexium.com
We are looking for energetic candidates who can work independently and ready to work for a Startup
The following positions are available

1) Full-stack developer in .NET MVC & Angular
2) T-SQL developer
3) Remote Implementation Consultant

**1) Full Stack developer**

Looking for a full stack developer who knows Angular, .net c# & T-SQL and has several years of work experience in developing ERP Software. You will be responsible for designing, planning, and implementing software development,

**REQUIRED SKILLS & EXPERIENCE:**

- Minimum of 5-7 years of applications development experience in the areas of:
- C# / ASP.NET Core design patterns and core principles
- Web UI Development (JavaScript / HTML5 / CSS / Bootstrap)
- Web component framework experience with Angular or AngularJS
- Web Service / API application integration experience (REST APIs)
- Experience with MS SQL Server

**2) T-SQL Developer**

The role of the Senior SQL Developer is to provide senior-level support for the technical team as well as work on complex projects. The individual is expected support the management of their consulting practices. The Senior SQL Developer must have prior working experience in the industry. You will be part of the Implementation and Support Team, helping with the technical aspect of ERP software.

**Responsibilities and Duties**

- Help with Implementing ERP Software
- writing complex custom reports in SSRS, **Tableau & Power Bi**
- writing complex stored procedures, user functions
- Responsible for developing stored procedures for custom applications based on business requirements
- 3-5 years experience with SQL Server.

**3) Remote Implementation Consultant**

The role of the Implementation Consultant is to be a primary point of contact for a portfolio of clients, managing the full software implementation life cycle including installation, business process analysis/workflow design, configuration, training, user testing, and overall project management. The individual is expected to work alongside other team members to proactively support the management of their consulting practices. The Implementation Consultant must be detail-oriented, anticipatory, organized and able to work independently in a fast-paced environment while managing confidential information. They should also have a good command of Accounting and Real Estate and Investment Management and accounting knowledge would be an asset.

**Education:**

- Chartered Accountant (Qualified/Semi Qualified) / MBA-Finance

**Qualifications:**

- 3+ years' experience with enterprise class software implementation delivery in a project management or business analyst role.
- Strong domain knowledge in Finance especially Financial Accounting with ability to understand and interact on complex accounting requirements
- Good knowledge of international accounting practices and standards
- Willing to work on ERP Software implementation and/or support projects
- Excellent verbal and written communication and strong presentation skills
- Experience designing and drafting project management deliverables
- Proven background in technology consulting and medium to large scale technical roll outs
- Knowledge of accounting and business process in real estate and investment management
- Completed training delivery as part of consulting track
- Excellent analytical and problem-solving skills

# சஜித் அணியின் 99 பேரின் கட்சி உறுப்புரிமை நீக்கம்!

## ஐ.தே.க. செயற்குழு ஏகமனதாக தீர்மானம்

கொழும்பு, மே 30

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பிற கட்சிகளில் போட்டியிட வேட்பு மனுக்களில் கையொப்பமிட்ட 99 பேரின் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்த ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்று ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் வேட்புமனு தாக்கல் செய்த ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் 99 பேருக்கு எதிராகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவர்களின் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்தும் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானத்துக்கே மத்திய செயற்பாடு இந்த அனுமதியை நேற்று வழங்கியுதுள்ளது.

இதேவேளை, அரசுடன் இணைந்து தேசிய அரசு அமைக்கும் எந்தத் திட்டமும் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடையாது என்று இன்றைய மத்திய செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ஓ.5,22)

# பதிலடி கொடுக்கத் தயார்

## சஜித் அணி கொதிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு எடுத்துள்ள தீர்மானத்தை நிராகரிக்கின்றோம். அதை ஏற்க முடியாது. சட்டரீதியாக சவால்களை எதிர்கொள்வோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிடும் நபர்கள் மற்றும் அக்கூட்டணிக்கு ஆதரவு வழங்குபவர்கள் என 99 பேரின் கட்சி உறுப்புரிமையை நீக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது.

தன்னிலை விளக்கம் அளிப்பதற்கு காலக்கெடுவும் விதிக்கப்பட்டுள்ளது. அதுவரையில் ஐ.தே.கவில் வகித்த பதவிகளில் இருந்து அவர்கள் நீக்கப்பட்டுள்ளனர். பிரதித் தலைவர் பதவியில் இருந்து சஜித் தூக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ரஞ்சித் மத்தும பண்டார, "ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் எம்முடனேயே இருக்கின்றனர். செயற்குழு உறுப்பினர்களில் 50 வீதத்துக்கும் அதிகமானவர்கள் எமது அணியில் இருக்கின்றனர். செயற்குழு வழங்கிய அனுமதியின் பிரகாரமே புதிய கூட்டணி அமைக்கப்பட்டது.

தன்னிச்சையான முறையிலேயே எம்மை நீக்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதனை நாம் நிராகரிக்கின்றோம். சவாலுக்குட்படுத்தப்படுமானால் சட்டரீதியாக எதிர்கொள்வோம்.

ஐக்கிய தேசியக்கட்சியினர் என தற்போது கூறிக்கொள்ளும் சிறு குழுவினருக்கு அரசாங்கத்துடன் 'டீல்' இருக்கின்றது. இதன்காரணமாகவே எமது காலை வாருவதற்கு முயற்சிக்கின்றனர். கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது இந்த குழுவே எமக்கு எதிராக செயற்பட்டு, வெற்றியை தடுத்தது.

அதேவேளை, உள்ளாட்சிமன்ற உறுப்பினர்களை மிரட்டும் செயலில் ரணில் தரப்பு ஈடுபட்டுள்ளது. எமக்கு ஆதரவு வழங்கினால் பதவி பறிக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. இதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். எனவே, இப்படியான "டீல்காரர்களுக்கு" மக்கள் பாடம் புகட்ட வேண்டும். இவர்களிடம் இருந்து கட்சியையும், தலைமையகத்தையும் பாதுகாக்கவேண்டும். அதனை நாம் செய்வோம்" - என்றார். (எ-44)



# பெற்றோல் விலையை குறைக்கவே மாட்டோம்

## அமைச்சர் பந்துல உடும்புப்பிடி

கொழும்பு மே 30



**உலக சந்தையில் கனிய எண்ணெய் பீப்பாயின் விலை குறைவடைந்துள்ளதென்பதற்காக இலங்கையில் எரிபொருள் விலை குறைக்கப்படும் என்று எவரும் எதிர்பார்க்க வேண்டாம். யார் எத்தகைய எதிர்ப்புகளை வெளிப்படுத்தினாலும் இலங்கையில் எரிபொருள் விலை குறையாது என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.**

அரச திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ஒரு வருடத்துக்கான ஏற்றுமதியாக 11 பில்லியன் ரூபா எமக்கு கிடைக்கிறது. ஆனால் இறக்குமதிக்காக 22 பில்லியன் ரூபா செலவாகின்றது. ஆகவே ஒவ்வொரு ஆண்டும் 11 பில்லியன் ரூபா நெருக்கடியிலேயே எமமால் பயணிக்க வேண்டியுள்ளது.

எனினும் கொவிட் 19 நெருக்கடியை அடுத்து மேலும் பல பிரச்சினைகளை நாம் சந்திக்க நேர்ந்துள்ளது. ஏற்றுமதி செய்யப்படும் ஆடைஉற்பத்தி குறைந்துள்ளது. சுற்றுலாத்துறை வீழ்ச்சி கண்டுள்ளது.

எனவே வெளிநாட்டு நிதி எமக்கு கிடைக்கவில்லை. இந்தநிலைமை நாட்டில் தொடர்ந்தால் மிகப்பெரிய நெருக்கடியை சந்திக்க நேரிடும். எனவே தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். விவசாயம், தேசிய உற்பத்தி என்பவற்றை பலப்படுத்துவதன் மூலமாகவே எங்களால் இந்த நெருக்கடியை சமாளிக்க முடியும். அதற்காகவே ஏற்றுமதி, இறக்குமதியில் மாற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கை வங்கியில் எண்ணெய் கணக்கொன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதில் எமக்கு கிடைக்கும் நிவாரணநிதியை சேர்த்துபெற்றோலியகூட்டுத்தாபனகடனை செலுத்துவதே எமது நோக்கமாகும். இதில் யார் என்ன எதிர்ப்பு தெரிவித்தாலும் எரிபொருள் விலை குறையாது- என்றார். (த)

# மிருசுவில் இளைஞன் பிரான்சில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 30



பிரான்ஸில் கொரோனா நோயிலிருந்து குணமடைந்திருந்த இளைஞர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார் என்று அவருடைய உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மிருசுவில் விடத்தற்பளையைச் சேர்ந்த பத்மநாதன் சிவஜீவன் (வயது-37) என்பவரே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று முழுமையாக குணமடைந்திருந்தார். எனினும் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-19)

# அளுத்கமகே கூறியது மிகப்பெருந் தவறு

## அவருக்கே கடிதம் அனுப்பியது ஜே.வி.பி.

கொழும்பு, மே 30

"குவைத்திலிருந்து கடந்த 19ஆம் திகதி இலங்கையர்கள் நாட்டுக்கு வந்தமையானது குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதற்குச் சமமானது" என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ள கருத்து கவலைக்குரியது என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார், மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: குவைத்திலிருந்து இலங்கைக்கு கடந்த19ஆம் திகதி வருகை தந்த இலங்கையர்கள் குவைத் அரசால் தெரிவுசெய்யப்பட்ட கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் என்றும், அவர்களுடைய வருகை இலங்கைக்கு குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதற்கு ஈடானது என்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கடந்த 25 ஆம் திகதி தெரிவித்த கருத்து கவலைக்குரியது.

அந்தச் சந்தர்ப்பத்தில் அவரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் பல அடிப்படையற்ற போலியான குற்றச்சாட்டுக்களே.

இவ்வாறு குவைத்திலிருந்து வந்தவர்கள் தெரிவுசெய்யப்பட்ட நபர்கள் என்றும், குறித்த நபர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமல் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டவர்கள் என்றும் கூறப்பட்டமை முற்றிலும் உண்மைக்குப்புறம்பானவை. 467பேரும் மருத்துவபரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களில் நால்வர் அங்கு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். குவைத் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் வசிக்கும் இலங்கையர்களில் பெரும்பாலானவர்கள் தம்மை நாட்டுக்கு அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கடந்த இரு மாதங்களுக்கு முன்னரே கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது நீங்கள் அறிந்த விடயம்.

எனினும், அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அரசு தயக்கம் காண்பித்ததால் தற்போது இவ்வாறான தீவிர நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்கும் அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கும் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ள வெளிநாட்டு அரசுகளை விமர்சிப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

இவ்வாறான நிலையில் வெவ்வேறு நாடுகளிலும் சிக்கித் தவிக்கின்ற இலங்கையர்களையும்நாட்டுக்கு அழைத்து வருவதை நிறுத்துவதற்கும் அரசுமுயற்சிக்கின்றது. எனவே, நாங்கள் குவைத் கிளைக்கு வழங்கியுள்ள தெளிவுபடுத்தல் உங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நாட்டுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தவொரு அரசும் தயாராகவுள்ளது.

அந்தப் பொறுப்பைக் கைவிட்டு பாதிக்கப்பட்டுள்ள பிரஜைகள் மற்றும் அவர்களை இலங்கைக்கு அழைத்து வருதல் என்பனவற்றுக்காக வெவ்வேறு ஒத்துழைப்புக்களை வழங்குகின்ற அரசுகளுக்கு இலங்கை அரசின் உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு நாம் அதிருப்தி தெரிவிக்கின்றோம். மிகுந்த உடல் நலத்துடனேயே மேற்கூறப்பட்ட இலங்கையர்கள் வெளிநாடுகளில் தொழில் புரிந்து வந்தனர்-என்றுள்ளது. (த)

# கொரோனா அலை மீண்டும் வரவாய்ப்பு

## மருத்துவ சங்கம் கூறுகின்றது

கொழும்பு, மே 30

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலை ஏற்படலாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான கடற்படையினர் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வந்த கோப்புகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்யவில்லை என்றால் கொரோனாவின் இரண்டாவது அலை நாட்டினுள் ஏற்படக்கூடும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிசெயலாளர்மருத்துவர்நவீன்டி சொய்ஸா தெரிவித்துள்ளார்.

இதுவரையில் உலக சுகாதார அமைப்பு ஆசியா, அமெரிக்கா உட்பட பல நாடுகளுக்கு இரண்டாவது கொரோனா அலை தொடர்பில் எச்சரிக்கை விடுத்திருந்தது. எனவே குறித்த நோயாளிகளை முகாமைத்துவம் செய்வது அத்தியாவசியம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நடவடிக்கைக்காக சமூக இடைவெளியை கடைப்பிடித்தல், சுயதனிமைப்படுத்தல், கிருமிநாசினி தெளித்தல் மற்றும் முகக்கவசம் அணிதல் ஆகியன வற்றைகட்டாயம்பின்பற்றுங்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து இலங்கைவரும் நபர்களுக்காக மருத்துவமனை மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களின் வசதிகளை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (த)

# மானாவாரி நிலங்களை துப்புரவுசெய்ய விடுங்கள்

## காணி உரிமையாளர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய், எரிந்தகாடு மானாவாரி விவசாய நிலங்களைத் துப்புரவு செய்வதற்கு காணி உரிமையாளர்கள் சென்ற போது, குறித்தவிவசாயநிலங்களைத் துப்புரவு செய்யமுடியாதுஎன்று வனவளத்திணைக்களத்தினர் தடுத்துள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் இதைக் கவனத்திலெடுத்து தாம் இந்த விவசாய நிலங்களைத் துப்புரவு செய்து மானாவாரி நெற்செய்கையை தொடர வழியேற்படுத்துமாறு அந்தப் பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும்தெரிவித்துள்ளதாவது: 1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தோம். ஏறத்தாள முப்பதாண்டுகளுக்குப் பின்னரேமீளக்குடியமர்ந்துள்ளோம். எமது விவசாய நிலங்கள் அனைத்தும் காடுகளாக காட்சியளித்தன.

இதனால் எமக்குரிய பல விவசாய நிலங்களைத் துப்புரவு செய்து, விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வனவளத் திணைக்களம் தடை விதித்திருந்தது.

இந்த நிலையில் எரிந்த காடு (சகலாத்துவெளி) என்னுமிடத்தில் நாம் விவசாய நடவடிக்கைகளைச் செய்யமுடியுமென்று மாவட்ட செயலகத்தாலும், உரிய அரச அதிகாரிகளாலும் அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய குறித்த பகுதியில் 2012ஆம் ஆண்டிலிருந்து மானாவாரி விவசாய நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

இந்த வருடமும் பெரும்போக மானாவாரி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

அதற்கமைய குறித்த விவசாயநிலங்களை முற்கூட்டியே சீரமைப்பு செய்வதற்கென நாம் கனகரக வாகனங்களுடன் அந்த பகுதிக்குச் சென்ற போது, குறித்த விவசாய நிலங்களை துப்புரவுசெய்ய முடியாதென்று வனவளத் திணைக்களத்தினர் தடை விதிக்கின்றனர்.

எனவே குறித்த காணிகளைத் துப்புரவுசெய்து இந்தவருடமும் முறையான விதத்தில் மானாவாரி விவசாய நடவடிக்கை செய்வதற்கு வழியேற்படுத்தித்தரவேண்டும்-என்றனர்.

இதுதவிர, கொக்குத் தொடுவாய் பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்குரிய பல்லாயிரக்கணக்கான குளத்தின் கீழான வயல் நிலங்களை, மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை வெலிஓயா பகுதி சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளித்துள்ளனர் என்றும் கொக்குத்தொடுவாய் பகுதி தமிழ் மக்கள் 2011ஆம் ஆண்டிலிருந்து குற்றஞ்சாட்டி வருகின்றனர். (த-246)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இரண்டு சாவுகளும், வளையும் சட்டங்களும்

ஆறுமுகம் தொண்டமானின் இறுதிச் சடங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் அன்று ஊரடங்குச் சட்டம் என அறிவிக்கப்பட்டதால் திட்டமிட்டபடி அந்த இறுதிச்சடங்குநடக்குமா, இல்லையா என்ற குழப்பம் ஏற்பட்டிருந்தது. ஏனெனில் அந்த இறுதிச் சடங்கில் முக்கியமான அரசியல்வாதிகளும், பல்லாயிரக் கணக்கான தொண்டர்களும், மக்களும் கலந்து கொள்ள ஏற்பாடாகியிருந்தது. ஆனால் அன்று ஊரடங்குச் சட்டம் என்பதால், அவர்களின் போக்குவரத்து முதல் இறுதி யாத்திரையில் கலந்து கொள்வது வரை எல்லாமே சிக்கலாகி விடும். பொதுவாகவே கொரோனா வந்த பின்னர் மரணச் சடங்குகளில் கூட நெருங்கிய உறவினர்களைத் தவிர, வெளிநபர்கள் கலந்து கொள்ள பொலிஸ் அனுமதி கொடுப்பதில்லை. அதுவும் ஊரடங்கு நாளில் ஒரு மரணச் சடங்கில் ஆயிரக்கணக்கானோர் திரள்வதற்குப் பொலிஸார் அனுமதிப்பார்களா என்ற கேள்வி எழுந்திருந்தது. ஆயினும் ஊரடங்குச் சட்டம் ஆறுமுகம் தொண்டமானின் இடையூறாக இருக்காது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். அதனால் ஞாயிற்றுக்கிழமை, மலையக மக்களின் கண்ணீர் மழையில் நனைந்தபடி ஆறுமுகம் தொண்டமானின் இறுதி யாத்திரை நடக்கவுள்ளது.

ஆனால், "ஒரு அரசியல்வாதியின் இறுதிச் சடங்குக்காக ஊரடங்கை ஒரு பொருட்டாக மதிக்கத் தேவையில்லை திட்டமிட்டபடி எத்தனை பேரையும் அழைத்து வந்து இறுதி ஊர்வலத்தைச் செய்யுங்கள்" என ஒரு நாட்டின் பிரதமரே சொல்கின்ற அளவில் தான் இலங்கையில் சட்டத்தின் ஏற்றத்தாழ்வு உள்ளது. இதே மலையகத்தில் சில நாட்களுக்கு முன்னர் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த பெண்ணொருவர் குளவி கொட்டியதில் உயிரிழந்திருந்தார். இதனால் வெகுண்டெழுந்த மக்கள், அந்தப் பெண்ணின் சாவுக்கு நீதி கேட்டு, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்காத தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக ஜனநாயக ரீதியிலான போராட்டம் ஒன்றை முன்னெடுக்கத் திட்டமிட்டனர். இதனை எப்படியோ மோப்பம் பிடித்த பொலிஸார் அந்த ஆர்ப்பாட்டத்துக்கு தடை விதித்தனர். அத்தோடு உயிரிழந்த பெண்ணின் இறுதிச் சடங்கிலும் மட்டுப்படுத்தப்பட்ட தொகையினரே கலந்து கொள்ளலாம் எனவும் நிபந்தனை போடப்பட்டது. ஏழைகள் என்பதால் அவர்களும் வாய்மூடி மௌனிகளாக மிகச் சிலரோடு அந்தத் தாயின் உடலைக் கொண்டு சென்று எரித்தனர். ஊரடங்கற்ற நாளிலேயே இந்த நிலைமை என்றால், அன்றைக்கு ஊரடங்காக இருந்திருந்தால் அடுத்த நாள் தான் அவரின் உடலைத் தகனம் செய்ய அனுமதி கிடைத்திருக்கும்.

அப்படிப்பட்ட நிலையில்தான் ஊரடங்காவது, மண்ணாங்கட்டியாவது. அதைப்பற்றி அலட்டிக் கொள்ளாமல் இறுதிச் சடங்கை பெருமெடுப்பில் செய்யுங்கள் என அரசே ஆறுமுகம் தொண்டமானின் உறவினர்களுக்குப் பச்சைக் கொடி காட்டிவிட்டது. பணமும், அதிகாரமும் உள்ள இடத்தில் நாட்டின் சட்டதிட்டங்கள் எப்படி வேண்டுமானாலும் வளைந்து கொள்ளும் என்பதற்கு ஆறுமுகம் தொண்டமானின் இறுதிச் சடங்கும் நல்லதொரு உதாரணமாக மாறப்போகின்றது. நாலைந்து பேர் ஒன்று கூடி தீபமேற்றினாலே , கொரோனா பரவப்போகின்றது என தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த மும்முரமாகச் செயற்படும் பொலிஸ் உள்ள நாட்டில், ஆயிரக்கணக்கானோர் ஒரு மரணச் சடங்கில், அதுவும் ஊரடங்கு நாளில், கூடுவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. அப்படியானால் நாலைந்து பேர் ஒன்றுகூடினால் தான் கொரோனா பரவும், 'ஆயிரக்கணக்கானோர் கூடினால் பரவாது என்ற விஞ்ஞானரீதியான தீர்வுகள் ஏதுமுண்டா?

அரசுக்கு வேண்டுமானால் பணம், அதிகாரம் என்ற ஏற்றத்தாழ்வுகளைப் பார்த்து சட்டத்தை அதற்கேற்ப வளைத்து நெளிக்க முடியும். ஆனால் கொரோனாவுக்கு இந்தக் 'கோதாரி' ஒன்றும் தெரியாதே. அதனால் கொரோனா பரவும் ஏதுநிலை ஒன்றை ஆறுமுகம் தொண்டமானின் இறுதிச்சடங்கு வலிந்து உண்டாக்கப்போகின்றது. ஏனெனில் நாட்டின் பல்வேறு பாகங்களில் இருந்தும் தொண்டர்களும், மக்களும் வருவார்கள். அப்படி வருபவர்களில் குறைந்தபட்சம் ஒருவராவது கொரோனாக் காவியாக இருந்துவிட்டால் அவ்வளவு தான். எப்படி வெலிசறைக் கடற்படை முகாம், ஒரு கடற்படைச் சிப்பாயின் அஜாக்கிரதையால் சின்னபின்னமானதோ அதே போன்ற ஒரு ஆபத்தான நிலை ஆறுமுகம் தொண்டமானின் இறுதி ஊர்வலத்தாலும் ஏற்பட்டு, சமூகத் தொற்றுக்காக வாசல் மிகப்பெரிதாகத் திறக்கப்பட்டு விடும். அப்படி இன்னொருமுறை இலங்கை கொரோனாவின் கோரப்பிடிக்குள் சிக்குவதைத் தான் அரசும் விரும்புகிறது போலும்.

## இலங்கையில் இவ்வருடம் இதுவரை

# டெங்கு நோயால் 20 பேர் சாவு கொரோனாவால் 10 பேர் சாவு

**கொழும்பு, மே 30**

**இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 20 டெங்கு நோயாளர்களும், கடந்த வருடத்தில் 150 டெங்கு நோயாளர்களும் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார். அதேவேளை, இவ்வருடம் இதுவரையான காலப்பகுதியில் கொரோனாவால் இதுவரை 10 பேரே உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.**

கொரோனா வைரஸிலிருந்து பொதுமக்கள் பாதுகாக்கப்படுவது போன்று, டெங்கு நோயிலிருந்தும் பொதுமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு தமக்கு உரியது என்றும், அதனாலேயே ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய, 'டெங்கு ஒழிப்பு செயற்பாட்டு செயலணி' அமைக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 'உங்களது சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருத்தல், உங்களைச் சுற்றியுள்ள கட்டடங்களைச் சுத்தமாக வைத்திருத்தல் போன்றன உங்களுடைய பொறுப்பாக எண்ணி செயற்படுமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம்' - என்றார். (ம-22)

# ஒரே சூலில் 3 குழந்தைகள் அனைவரும் ஆரோக்கியம்

அம்பாறை, மே 30

பொத்துவில் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு ஒரே சூலில் 3 குழந்தைகள் பிறந்துள்ளன. அம்பாறை மாவட்டம் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையே குழந்தைகள் பிரசவிக்கப்பட்டன.

35 வயதுடைய பொத்துவில் நகரப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு குழந்தைகளைப் பிரசவித்துள்ளார். சத்திர சிகிச்சை மூலம் ஒரு சூலில் 3 குழந்தைகளும் பிறந்துள்ளன. 2 ஆண் குழந்தைகளும் 1 பெண் குழந்தையும் உள்ளடங்குவதுடன் தாயும் நலமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. மயக்க மருத்துவநிபுணர் சுதேஸ்வரியின் கண்காணிப்பில் குறித்த சத்திர சிகிச்சையை அறுவைச் சத்திர சிகிச்சை நிபுணர் கிரந்த பிரசாத் உள்ளிடங்கலாக மகப்பேற்று வைத்திய நிபுணர் ராஜிவ் விதானகே தலைமையிலான குழுவினர் மேற்கொண்டனர். (ப)

# 4 வாகனங்களை மோதியது டிப்பர்

யாழ்ப்பாணம் பலாலி வீதியின் பரமேஸ்வராச் சந்தியில் இடம்பெற்ற விபத்தில், ஒருடிப்பர் நான்குவாகனங்களை மோதித் தள்ளியது. ஒரு கார் மற்றும் மூன்று மோட்டார் சைக்கிள்கள் என்பன டிப்பரால் மோதுண்டன.

திருநெல்வேலியில் இருந்து பரமேஸ்வராச் சந்திப் பகுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றது. விபத்துத் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம-105)



# கொரோனா தொற்றால் நிலையற்ற தன்மை

## ஜனாதிபதி கோத்தா உரை

கொழும்பு, மே 30

உலகளாவிய வர்த்தகம், சுற்றுலா, முதலீடுகள் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவை ஸ்தம்பிதமடைந்துள்ளன. தொற்றுநோய் நிலைமையானது நிலையான வர்த்தகங்கள் மற்றும் பொருளாதாரங்களை திடீரென சீர்குலைத்து, நிலையற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கனடா, ஜமைக்கா மற்றும் ஐ.நா. பொதுச்செயலாளர் ஆகியோரால் 'கொவிட் 19 மற்றும் அதற்கு பின்னரான காலங்களில் அபிவிருத்திக்கான நிதியுதவி' குறித்த உயர்மட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து ஜனாதிபதி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று அவருடைய ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இது பற்றி ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

செயற்படாத சொத்துக்கள் உயர்ந்து திரவத் தன்மை நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதால் வங்கித்துறையும் பாதிக்கப்பட்டுள்ளது. முழு சேமிப்பு முதலீட்டு சமன்பாடு சரிவடைந்துள்ள காரணத்தினால் அபிவிருத்திக்கு நிதியளித்தல் என்பது உலகப் பொருளாதாரத்திற்கு பொருத்தமான தலைப்பாக உள்ளது.

தொழிலாளர் வருமானம், ஏற்றுமதி சார்ந்த வருமானம், சுற்றுலா மற்றும் அதனுடன் தொடர்புபட்ட சேவைகள் மூலம் இலங்கையின் பிரதான பரிமாற்ற வழிகள் எமது உண்மையான பொருளாதாரத்தைப் பாதித்துள்ளன. வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார இழப்பு பெரியது.

நாம் மிகவும் மதிக்கும் ஒரே சொத்து மனித அபிவிருத்தி என்பதால் எத்தகைய சிரமங்களை நாம் எதிர்கொண்டாலும் 'மக்களே முதன்மையானவர்கள்' என்ற எமது கொள்கையில் சமரசம் செய்ய முடியாது. விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள், டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் நிர்வாகம், கிராமிய பொருளாதாரம் மற்றும் வறுமைக் குறைப்பு, மக்களுக்கும் வர்த்தக சமூகத்திற்குமான சந்தை வாய்ப்புகளை அபிவிருத்தி செய்தல், கிராமங்களுடனான மேம்பட்ட இணைப்பு மற்றும் எமது சூழல் பாதுகாப்பு உத்திகளுக்கு ஏற்ப பசுமை நகரங்களை உருவாக்குதல் என்பன சுமார் 2 மாதங்கள் பொருளாதார செயற்பாடுகள் மூடப்பட்டிருந்த காரணத்தினால் பின்னடைவைச் சந்தித்துள்ளன-என்றுள்ளது. (த)

# முடக்கத்தால் யாழ். மாநகர சபைக்கு ரூபா 20 மில்லியன் வருமான இழப்பு

## பதில் முதல்வர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், மே 30**

**கொரோனா வைரஸ் தாக்கத்தால் கடந்த இரு மாதங்களில் ஏற்பட்ட முடக்கம் காரணமாக யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு 20 மில்லியன் ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாக பதில் முதல்வர் து.ஈசன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் மாநகர சபையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தாக்கம் காரணமாக அனைத்துப் பகுதிகளிலும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. இதனால் எமது சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச் சந்தைகளும் வர்த்தக நிலையங்களும் பூட்டப்பட்டன. இதன் காரணமாக எமக்கு இரண்டு மாதங்களுக்கு 18 மில்லியன் ரூபா வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் வருமானம் இல்லாத நிலையிலும் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த நிதிக்கு மேலதிகமாக கொரோனாத் தொற்றின்போது கிருமித் தொற்று நீக்கல் மற்றும் சுகாதார சேவைகளை முன்னெடுக்க 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டுள்ளது. அந்த வகையில் எமக்கு கொரோனா காலத்தில் ஏற்பட்டிருந்த இருமாத முடக்கநிலையில் மொத்தமாக 20 மில்லியன் ரூபா நிதி வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக எமது வரவு செலவுத்திட்டத்தில் 200 மில்லியன் ரூபா எதிர்பார்க்கப்பட்ட வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. அதில் குறிப்பாக உரிமம் மாற்றத்தினால் கிடைக்கும் 130 மில்லியன் ரூபா வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தில் கிடைக்கும் வருமானம் 20 மில்லியன் வரையான வருமானம் இழக்கப் படலாம். ஏனெனில் இம்முறை நல்லூர் ஆலய உற்சவம் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளது. இவ்வாறு வேறு வருமானங்களான வரிகள், சந்தைக் குத்தகை இழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட சந்தைகளை குத்தகைக்கு எடுத்தவர்கள், வர்த்தகர்களுக்கு சில வரி விலக்குகளை சில நாள்களுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளோம். மேலும் தற்போது கழிவகற்றல் செயற்பாட்டுக்கு தனியாரின் உழவு இயந்திரங்களைப் பாவிப்பதை தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம். கழிவகற்றல் செயற்பாட்டுக்கு மாநகர சபையின் வாகனங்கள் மட்டுமே பயன்படுத்தப் பட்டு வருகின்றன. எனினும் நாம் திண்மக் கழிவகற்றலைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம்.

தற்போது கடந்த சில நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பெய்த மழையின் காரணமாக டெங்கின் தாக்கம் மீண்டும் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மாநகர எல்லைக்குள் சில நோயாளிகள் அடையாளம் காணப் பட்டுள்ளதாக அறியக் கிடைக்கின்றது. எனவே நாம் அது தொடர்பிலும் சுகாதாரத் திணைக்களம், பிரதேச செயலகத்துடன் இணைந்து அதற்கான முன்னேற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம் - என்றார். (ப-111)

# கொக்கிளாய், நாயாற்றில் சட்டவிரோத கடற்றொழில்

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, மே 30

முல்லைத்தீவு கொக்கிளாய் மற்றும், நாயாறு உள்ளிட்ட இடங்களில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் அதிகரித்துள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே குறித்த சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் மரியநாயகம் தொம்மைப்பிள்ளை;

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், நாயாறு உள்ளிட்ட இடங்களில் சட்ட விரோத தொழில்கள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக சுருக்குவலை, டைனமெற், வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல் இவ்வாறான சட்டத்துக்கு முரணான கடற்றொழில் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. இதனால் எமது பகுதி மீனவர்கள மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். வெளி மாவட்ட மீனவர்களின் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு முன்னர், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மீனவர்கள் தமது தொழிலை மிகவும் சிறப்பாக மேற்கொண்டு வந்துள்ளனர். தற்போது அதிகரித்துள்ள வெளி மாவட்டத்தவர்களின் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளால், மாவட்டத்திலுள்ள மீனவர்களின் கடற்றொழில் மிகவும் வீழ்ச்சி யடைந்துவரும் நிலையினையே காணமுடிகின்றது. இதனை உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தியிருந்தும், இதுவரையில் இதுதொடர்பில் உரியதரப்பினர் எவரும் நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. எனவே கடற்றொழிலுடன் தொடர்புடைய அமைச்சர், உரிய அதிகாரிகள் இவ்விடயத்தை கவனத்திலெடுத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ப-246)



# உணவகங்கள், மதுக்கடைகள்மீது சுகாதாரப் பிரிவு திடீர் பாய்ச்சல்!

வவுனியா, மே 30

வவுனியா நகரப்பகுதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உணவகங்கள் , மதுபானசாலைகள் மீது திடீர்ச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். நேற்று முன்தினம், வியாழக்கிழமை மாலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணிவரையிலான காலப்பகுதியில் இந்தச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

கொவிட் 19 வைரஸ் தாக்கம் காரணமாக பல்வேறு நிபந்தனைகள் அடிப்படையில் உணவகங்கள், வர்த்தகநிலையங்களைத் திறப்பதற்கு வவுனியா பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணக்கம் தெரிவித்திருந்தனர். இந்நிலையில் யூட் பிரீஸ் (சுகாதார வைத்திய அதிகாரி) , பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான வோல்டயன் , ஸ்சன் றோய் மற்றும் பொலிஸார் அடங்கிய குழுவினர் வவுனியா நகரப்பகுதிகளில் உள்ள உணவகங்கள் , மதுபானசாலைகளுக்குச் சென்று சோதனைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது உணவகங்களுக்கு வருகை தருகின்ற வாடிக்கையாளர் கைகளைச் சுத்தம் செய்வதில்லை, கூட்டாக இருந்து உணவருந்துவது , மருத்துவச் சான்றிதழ் இன்றி பணியாளர்கள் காணப்பட்டமை, காலவதியான உணவுப்பொருள்கள், முகக்கவசம் சீராக அணியாமை போன்ற பல்வேறு சுகாதார விதிகளுக்கு முரணான செயற்பாடுகள் அவதானிக்கப்பட்டன என்று அவர்கள் தெரிவித்தனர்.

அவ்வாறு காணப்பட்ட குறித்த உணவகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குறிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாவும் அவர்கள் தெரிவித்தனர். (ப-18)

# கொழும்பிலிருந்து வரும் பொருளை கடனுக்கு வழங்க முகவர்கள் மறுப்பு

## வியாபாரிகள் கவலை

சாவகச்சேரி மே 30

தொடர் ஊரடங்கால் பாதிக்கப்பட்டு, ஊரடங்கு தளர்த்தப் பட்ட பின்னர் போதிய வியாபாரமின்மையால் தவித்துக் கொண்டிருக்கும் வியாபாரிகளிடம் கடன் வியாபாரம் செய்வது நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுவதால் வியாபாரத்தை மேம்படுத்த முடியவில்லையென வியாபாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட வியாபாரிகள் தெரிவித்ததாவது;

முன்னைய காலங்களில் வியாபார நிலையங்களுக்கு. பொருள்களைக்கொண்டுவரும் கொழும்பில் உள்ள வர்த்தக நிறுவனத்தின் யாழ்.மாவட்ட முகவர்கள். ஒரு மாதத்தில் மீளச் செலுத்தக்கூடிய வகையில் பொருள்களை வழங்கிவிட்டுச் செல்வர். தற்போது பொருள்களைக் கொண்டு வரும் முகவர்கள் உடன் பணம் செலுத்தினால் மட்டும் பொருள்கள் வழங்கப்படுமெனத் தெரிவிப்பதால் வியாபாரத்தை மேம்படுத்த முடியவில்லை. தொடர் ஊரடங்கினாலும் அதன் பின்னர் சமூக இடைவெளியைப் பின்பற்றுமாறும் அறிவிக்கப்படுவதால் வியாபார நிலையங்களுக்கு வரும், பாவனையாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. வியாபாரம் குறைந்துள்ள காலத்தில் கடனுக்கு பொருள்கள் வழங்க வர்த்தக நிறுவனங்களின் முகவர்கள் பின்னடிப்பதால் எமது வியாபாரத்தை மேம்படுத்த முடியவில்லை என்றனர். (ப -9)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி நபரொருவர் கொலை

கொழும்பு,மே 30

கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் நபரொருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஹம்பேகமுவகொடவெஹெரமங்கட பிரதேசத்தில் இடம்பெற்றது.

குறித்த பகுதியில் உள்ள வீடொன்றில் நடைபெற்ற நிகழ்வில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறின் போதே இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேபடபெலெஸ்ஸகொடவெஹெரமங்கட பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். (ஐ)

# கதிர்காமத்துக்கான பாதயாத்திரை ஆரம்பம்

கொடிகாமம், மே 30

கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரை வல்வெட்டித்துறை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து நேற்றுமுன்தினம் வேல்சாமி மகேஸ்வரன் தலைமையில் ஆரம்பமானது. இந்த பாதயாத்திரை பல ஆலயங்களுக்கு சென்று தரிசனம் செய்து கதிர்காமத்தை சென்றடையும். (ஐ-159)



# ஆறுமுகன் தொண்டமானுக்கு வவுனியாவில் அஞ்சலி

வவுனியா, மே 30
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான மறைந்த ஆறுமுகன் தொண்டமானுக்கு வவுனியா குருமன் காட்டுப் பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்று மதியம் 12.00 மணியளவில் அஞ்சலி செலுத்தப்பட்டது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானின் திடீர்மறைவு மலையக மக்களுக்கு பேரிழப்பாகும். அவரின் பிறந்ததினமான நேற்று தமிழர் சமூக ஜனநாயக கட்சியும் சிறிரெலோ கட்சியும் இணைந்து இவ் அஞ்சலி நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது அன்னாரது உருவப்படத்துக்கு நினைவுச் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.
நிகழ்வில் சிறிரெலோ கட்சியின் செயலாளர் ப.உதயராசா, தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ப-18,110)



## வடக்கு, கிழக்கு இணைப்புக்கான சாவுமணியே ஜனாதிபதி செயலணி

*முன்னாள் எம்.பி சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு*

வவுனியா.மே.30
வடக்கு கிழக்கு இணைப்புக் கோரிக்கைக்கு அரசு அடிக்கும் சாவுமணியே ஜனாதிபதி செயலணி எனதமிழ்மக்கள்தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளரும்முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.
தனியார் ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதிலளிக்கையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.
உண்மையிலேயே இது வொரு கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு திட்டத்தின் நீட்சியே. தமிழர் தாயகத்தில் பௌத்தத்தின் பெயரால், தேசியப் பாதுகாப்பின் பெயரால், வன, நிலங்கள், தொல்பொருள் பகுதிகள் என்றெல்லாம் சிங்கள பேரினவாதிகள் அகலக்கால் பதித்து வருகின்றார்கள். தமிழர்களின் பூர்வீக நிலத்தைமுழுமையாகப் பறித்து சிங்கள தேசமாக மாற்றியமைப்பதற்கு பல்வேறு முனைப்புக்களைச் செய்துவருகின்றார்கள். அவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தில் புனித பூமி என்ற ரீதியில் பௌத்த விகாரைகள் அமைப்பதற்காக பௌத்த மதச் சின்னங்கள் ஆகியவற்றை மையப்படுத்தி காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய அம்பாறையில் 247 இடங்கள், திருகோணமலையில் 74 இடங்கள், மட்டக்களப்பில் 28 விகாரைகள் உட்பட 55 இடங்கள் பௌத்த மதத்துடன் தொடர்புடைய தொல்லியல் இடங்களாக அடையாளப்படுத்தியுள்ளனர். இந்த விடயத்தை தனியே கிழக்கு மாகாணத்தை மட்டும் மையப் படுத்தி பார்க்க முடியாது.
வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்பதும் வடக்கையும் கிழக்கையும் இணைக்க வேண்டும் என்பது தமிழர்களின் நீண்டகால கோரிக்கை. ஆனால் சிங்களப் பேரினவாதிகளைப் பொறுத்தவரையில் கொக்கிளாயில் சுமார் 60 சதுர கிலோ மீற்றர்களுக்குள் 5 கடற்படை முகாம்கள், 8 பௌத்த விகாரைகள், 10 இராணுவ முகாம்கள், 4 இராணுவ வியாபார நிலையங்கள் இவற்றுடன் சிங்களக் குடியேற்றங்களும் ஏற்படுத்தப்பட்டு வடக்கையும் கிழக்கினையும் நிரந்தரமாகப் பிரிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றார்கள்.
பின்னணிகளை வைத்துப் பார்க்கின்றபோது, மீண்டும் ராஜபக்ச அரசு ஆட்சிக்கு வந்துள்ள நிலையில் கிழக்கு மாகாணத்தில் தான் விட்ட இடத்திலிருந்து ஆரம்பித்து இலக்கை அடைவதற்கு விழைகின்றமை வெளிப்படுகின்றது. அதாவது கிழக்கில் கணிசமான அளவு சிங்கள பெரும்பான்மை மக்கள் தொகை மாற்றியமைப்பதற்கு திட்டமிடுகின்றமை புலனாகின்றது. அதன்மூலம் தமிழர்களின் வடக்கு கிழக்கு இணைப்புக் கோரிக்கைக்கு சாவுமணி அடிப்பதற்கே ராஜபக்ச அரசு முனைகின்றது. இந்த முயற்சிகளுக்கு தொல்பொருளின் பெயரால் காய் நகர்த்தப்படுகின்றது. அதனை கச்சிதமாகச் செய்து முடிப்பதற்கும், அதுதொடர்பில் பொதுமக்கள் உள்ளிட்ட தரப்பினர் கேள்வி கேட்காது அடக்குமுறைக்குள் வைத்திருப்பதற்கு காகவுமே படைத்தரப்பு அப்பணியில் களமிறக்கப்பட்டுள்ளது என்றார். (ப-110)

## ஆஸ்திரேலியாவிலிருந்து

# 2,500 பசுக்களை இலங்கைக்கு கொண்டுவர அரசு தீர்மானம்



கொழும்பு, மே 30
2 ஆயிரத்து 500 பசுக்களை ஆஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்குக் கொண்டுவர அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

இந்த நாட்டின் நுகர்வுக்கு இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் அளவைக் குறைக்கவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அரசாங்கம் கூறுகின்றது. அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.
இதில்கலந்துகொண்ட அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ரொமேஷ் பத்திரன இதனைக் கூறினார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஜனாதிபதி தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் நாட்டின் இறக்குமதியைக் குறைக்கும் நடவடிக்கைகள் குறித்து ஆராயப் பட்டுள்ளது. எனினும் அவுஸ்திரேலியாவில் இருந்து 2ஆயிரத்து 500 பசுக்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது. கமத்தொழில் அமைச்சர் சமல் ராஜபக்ச அமைச்சரவைக்கு முன்வைத்த அமைச்சரவைப் பத்திரம் மூலமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இந்த நாட்டு பொதுமக்களின் நுகர்வுக்காக 50 பில்லியன் ரூபாய்கள் பால்மா இறக்குமதியால் வெளிநாடுகளுக்கு வழங்கப்படுகின்றது. ஆனால் அதனை இலங்கையில் உற்பத்தி செய்துதேசியபால்உற்பத்தியைபலப் படுத்துவதற்கே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ப)

## கண்டியில் இடம்பெற்ற

# இன வன்முறைச் சூத்திரதாரிகளை சட்டத்துக்கு முன் நிறுத்த வேண்டும்

*முன்னாள் எம்.பி முஜிபுர் தெரிவிப்பு*

கொழும்பு, மே 30
திகன, கண்டி பிரதேசங்களில் கடந்த 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனவாத மதவாத வன்முறைகளின் சூத்திரதாரிகளைச் சட்டத்துக்கு முன் நிறுத்தும் பொறுப்பு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இருக்கின்றது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். விசாரணைகளில் அரசியல் தலையீடுகள் இருக்குமாயின் எதிர்காலத்தில் நாடு பாரிய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
திகன ,தெல்தெனிய பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு காரணமானவர்கள் பலர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது. குறித்த வழக்குகள் சட்டமா அதிபர் திணைக்களத்தால் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. அத்துடன் பேஸ்புக் ஊடாக இந்த வன்முறைப் பிரச்சாரங்களை மேற்கொண்டவர்களை இனம் காணமுடியும். சம்பவத்துக்குக் காரணமானவர்களின் பெயர்ப் பட்டியல் பேஸ்புக் நிறுவனத்திடம் இருக்கின்றது. அதனைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இருக்கின்றது. இந்தச் சம்பவங்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்று வருகின்றது. இந்த வன்முறைகளுக்கு பேஸ்புக் ஊடாக இனவாத வைராக்கியப் பிரச்சாரங்களை மேற்கொண்டு உதவியாக இருந்தவர்களை பேஸ்புக் நிறுவனம் இனம் கண்டுள்ளது. அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இருக்கின்றது. எனவே பத்தொன்பதாம் திருத்தத்தின் ஊடாக நாங்கள் மேற்கொண்ட சுயாதீன நீதிமன்றம் தொடர்ந்து செயற்பட்டு வருவதனால் தொடுக்கப்பட்ட வழக்குகள் அவ்வாறே இடம்பெறும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.
- என்றார். (ப)

## பயிற்சி உபகரணங்கள் அன்பளிப்பு

மட்டக்களப்பு. மே 30
இலங்கை சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு பிராந்திய நிலையம், மட்டக்களப்பு கிழங்கிலங்கை தொழிநுட்ப நிறுவகம், மட்டக்களப்பு பரியோவான் தொழில் பயிற்சி நிலையம் என்பவற்றின் பயன்பாட்டுக்கென ஹொலன்ட் வோர் சைல்ட் நிறுவனத்தின் உதவியில் சுமார் 6 இலட்சம் பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.
மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பான தொழிலுக்கு புலம் பெயர்ந்த நாடுகளுக்கு பயணிக்கும் தொழிலாளர்களுக்கு ஹொலன்ட் நாட்டு உதவியில் தொழில் திறமைகொண்ட பயிற்சியைப் பெற்றுக் கொடுக்க கிழக்கிலங்கை தன்னம்பிக்கை சமூக எழுச்சி நிறுவனமான எஸ்கோ நிறுவனம் உதவி வருகின்றது.
மாவட்டச் செயலர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஆலோசனைக்கமைய சுமார் 6 இலட்சம் பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் நேற்று அன்பளிப்பு செய்யப்பட்டன.
இந்த அன்பளிப்புப் பொருள்களை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் விசேட நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. எஸ்கோ நிறுவனத்தின் மாவட்டப்பணிப்பாளர் எஸ். பிரஸ்தியோன்தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அன்பளிப்பு உபகரணங்களை மாவட்டச் செயலர் கலாமதி பத்மராஜா உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்று உரிய நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகளிடம் கையளித்தார். (ப-150)

# பயிர்களுக்கு காப்புறுதி செய்து இழப்பீட்டை பெற்றுக்கொள்ளவும்

## முல்லை. மாவட்டச் செயலர் தெரிவிப்பு



**முல்லைத்தீவு, மே 30**

**விவசாய பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் பயிர்களுக்கு காப்புறுதி செய்வதன் ஊடாகவே இயற்கைஇடரின்போது இழப்பீடுகளை பெற்றுக்கொள்ளலாம் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்தார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீசிய கடும் காற்றால் சேதமடைந்த வீடுகளின் பயனாளிகளுக்கான முதற்கட்ட நிவாரண காசோலை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கருத்து தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வாரம் வீசிய கடும் காற்று காரணமாக வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு சேதங்கள் 10 ஆயிரம் ரூபாவுக்கும் உட்பட்டவர்களுக்கு முழுமையான நிதியும் அதற்கு மேற்பட்ட பெறுமதியான சேதங்கள் ஏற்பட்டவர்களுக்கு முற்பணமாகவும் இது வழங்கப்படுகின்றது. உண்மையான மதிப்பீடுகள் எடுக்கப்பட்டதன் பிற்பாடு மிகுதிக் கொடுப்பனவு வழங்கப்படும்.

புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், வெலி ஓயா, கரைதுறைப்பற்று பகுதிகளில் 64 வீடுகள் சேதமடைந்துள்ளன. பயிர்சேதமும் ஏற்பட்டுள்ளது. 2ஹெக்ரேயர் பப்பாசி பயிற்செய்கையும் 1.5ஹெக்ரேயர் வாழைச்செய்கையும் அழிந்துள்ளன.

விவசாய பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் பயிர்களுக்கு காப்புறுதி செய்வதன் ஊடாகவே இயற்கை இடரின்போது இழப்பீடுகளை பெற்றுக்கொள்ளலாம்.

யானையால் அழிவுகள், இறப்புக்கள் யானை செல்லும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் எல்லைக்குள் இழப்பு ஏற்பட்டால் இழப்பீடுகள் இல்லை. மக்கள் வாழ் பகுதிகளில் யானையால் பாதிப்பு இருந்தால்தான் இழப்பீடு வழங்கப்படும். தற்போது சோழக்காற்று வீசு கின்றது. இது அதிகளவான பயிர்களை சேதப்படுத்துகின்றது. குறிப்பாக பப்பாசி; வாழைச் செய்கைகள் பாதிப்படைந்துள்ளன.

எனவே விவசாயிகள் இந்தக் காலத்தில் என்றாலும் பயிர்களுக்கு காப்புறுதி செய்வதன் ஊடாக அழிவுக்கான இழப்பீடுகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் - என்றார். (த-19)

# மக்கள் தலைவர் சம்பந்தன் அல்லர்

## கூறுகின்றார் உதயராசா

முல்லைத்தீவு, மே 30

சம்மந்தன் மக்கள் தலைவர் கிடையாது. அவர் ஒரு கட்சியின் தலைவர். ஒட்டுமொத்த தமிழ் இனத்துக்கான தலைவர் வே.பிரபாகரன் மட்டுமே என்று தெரிவித்துள்ளார், சிறிரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா.

முல்லைத்தீவு உடையார் கட்டுப்பிரதேசத்தில் சிறீரெலோ கட்சியின் அலுவலம் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களை நாங்கள் மாற்றிக்கொள்ளவேண்டும். போரில் அளவுகடந்த இழப்புகளை சந்தித்த இனம் தமிழினம். இலட்சக்கணக்கான மக்கள் ஆயிரக்கணக்கான போராளிகள் உயிரிழந்தனர், பலர்காலைஇழந்து வாழ்கின்றார்கள். இவற்றுக்கு ஒவ்வொரு தமிழனுமே பதில்சொல்ல வேண்டிய கடமையில் இருக்கின்றோம்.

அறவளிப்போராட்டம், உண்ணாவிரத போராட்டம், இளைஞர் போராட்டம், ஆயுதப்போராட்டம் என இன்று அரசியல்ரீதியான போராட்டத்துக்கு நாங்கள் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதற்காகத்தான் தமிழ் மக்கள் வீட்டுசின்னத்துக்கு வாக்களித்தார்கள். ஆனால் அவரால் கட்சி உருவாக்கப்படவில்லை என்று கட்சியின் தலைவர், பேச்சாளர்கள் சொல்கின்றார்கள்.

எங்களுக்காக உயிர் நீத்த ஒவ்வொருவருக்காகவும் நாங்கள் என்ன மாற்றத்தைக் கொண்டு வரப்போகின்றோம் என்பதை உணரவேண்டிய காலத்தில் நிற்கின்றோம்- என்றார். (த-19)

# 4,000 கடற்படையினரும் குடும்பங்களும் தனிமையில்!

கொழும்பு, மே 30

வெலிசறை கடற்படை முகாமிலுள்ள சுமார் 4 ஆயிரம் கடற்படையினர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படை பேச்சாளர் இசுரு சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று அவர்களின் குடும்பத்தினரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். வெலிசர முகாமில் சுமார் 4 ஆயிரம் கடற்படையினர் உள்ளனர்.

இதேவேளை, கொழும்பின் கபூர் கட்டடத்தில் தங்கியிருந்த 200 கடற்படையினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று கடற்படை பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (த)



# மரம் சரிந்து வீழ்ந்ததால் போக்குவரத்து முடங்கியது

முல்லைத்தீவு, மே 30

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான்முள்ளியவளை வீதியில் நேற்று அதிகாலை வீசிய கடும் காற்றால் மரம் ஒன்று வீதியின் குறுக்கே வீழ்ந்துள்ளது. அதனால் வீதி ஊடான போக்குவரத்து சுமார் இரண்டுமணித்தியாலங்கள் தடைப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினரால் மரம் அறுத்து அப்புறப்படுத்தி வீதி போக்குவரத்து சீர்செய்யப்பட்டது - என்று தெரிவிக்கப்பட்டது. (த-19)

# அபிவிருத்தி அலுவலர் பதவி மதகுருமாருக்கு இனி இல்லை!

## கல்வி அமைச்சர் டலஸ் உறுதி

கொழும்பு, மே 30

எதிர்காலத்தில் பட்டதாரி நியமனத்தில் பிக்குகள், கன்னியாஸ்திரிகள் உள்ளிட்ட மதகுருமார்களுக்கு அபிவிருத்தி அலுவலர்கள் என்ற நியமனம் வழங்கப்படாது. அவர்கள் அனைவரும் கல்வித் திட்டத்துக்கு ஏற்ப ஆசிரியர் சேவைக்குள் சேர்க்கப்படுவார்கள் என்று கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் அபிவிருத்தி அலுவலர்களாகப் பணியாற்றும் 23 பௌத்த பிக்குகளுக்கு கல்வி அமைச்சில் கடந்த புதன்கிழமை ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது. இதன்போதே கல்வி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பட்டதாரி பயிற்சி திட்டம் அவ்வப்போது பல்வேறு அரசுகளால் மேலும் மேலும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு அரச நிறுவனங்களில் மதகுருமார்கள் அபிவிருத்தி அலுவலர்களாக நியமிக்கப்படுவதில் கடுமையான சிக்கல் உள்ளது. இந்த விடயம் பற்றி ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் இந்த ஆண்டு தொடக்கத்தில் அமைச்சரவைப் பத்திரம் முன்வைத்திருந்தனர். அதன்படி, துறவிகள் தலைமையிலான குருமார்கள், பூசகர்கள் கன்னியாஸ்திரிகள் ஆகியோரைஅபிவிருத்தி அலுவலர்கள் பதவிகளுடன் எந்த அரச நிறுவனத்திலும் நியமிக்க வேண்டாம் என்று முடிவு செய்துள்ளனர். - என்றார்.

"இது பாடசாலை முறைக்கும் நாட்டின் கல்விக்கும் ஒரு சவால். நாட்டை மாற்றுவதற்கு இது கொள்கை மாற்றம் மட்டுமல்ல, மாணவர்கள் தற்காலிகமாக வீட்டுக் காவலில் இருக்கும் போது, பரீட்சைகள் மற்றும் கல்வி குறித்து தற்காலிகமாக விரக்தியடையும் போது தலையிட மதகுருமார்கள் மற்றும் கன்னியாஸ்திரிகளை அழைக்கிறேன்" என்றும் கல்வி அமைச்சர்

# பாடசாலைகளைத் திறப்பதற்கு முன்னரான ஆராய்வு

சாவகச்சேரி, மே 30

பாடசாலைகள் திறப்பதற்கு முன்னர் மேற்கொள்ளவேண்டிய விதிமுறைகள் தொடர்பாக அதிபர்களுக்கான விழிப்புணர்வு கலந்துரையாடல் தென்மராட்சி கல்வி வலய கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில் வலயத்திலுள்ள சகல பாடசாலைகளின் அதிபர்களும் கலந்துகொண்டனர்.

பாடசாலைகள் திறப்பதற்கு முன்னர் மேற்கொள்ளவேண்டிய நடைமுறைகள் தொடர்பான வழிகாட்டி வெளியீடு மத்திய கல்வி அமைச்சால் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பாடசாலைகள் திறப்பதற்கு முன்னர் பாடசாலையில் மேற்கொள்ளவேண்டிய சுகாதார விதிமுறைகள் தொடர்பாக சுகாதாரத்துறைதிணைக்களபொதுச் சுகாதார பரிசோதகர்களான ம.பிரபாகரன், பி.தளிர்ராஜ் ஆகியோர் விளக்கமளித்தனர்.

பாடசாலைகளில் அனைத்து சுகாதார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சுகாதார பகுதியினரால் உறுதியளிக்கப்பட்ட பின்னர் வலயக் கல்விப் பணிப்பாளர் பாடசாலைகளைத் திறக்க அனுமதி வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைகளை எப்போது திறப்பது என்பது பற்றிய எந்த அறிவிப்பும் இதுவரை இல்லை. அவ்வாறு அறிவுறுத்தல்கள் ஏதாவது விடுக்கப்பட்டு பாடசாலைகளை ஆரம்பிக்கும்போது இந்த நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் -என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-9)

# சி.ஐ.டியின் புதிய பணிப்பாளரால் இடம்மாறும் சிரேஷ்ட அதிகாரிகள்

## பணிப்பாளர் மீது பல வழக்குகள் உள்ளன என்றும் அந்த அதிகாரிகள் விசனம்

**கொழும்பு, மே 30**
**சி.ஐ.டி. என அறியப்படும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ், கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள நிலையில், அங்கு சேவையாற்றும் பல முக்கிய சிரேஷ்ட அதிகாரிகள் தமக்கு இடமாற்றம் வழங்குமாறு கோரியுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

சி.ஐ.டி.யின் கணினி, டிஜிட்டல் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைப் பிரிவை வழிநடத்தும் சிரேஷ்ட பெண் பொலிஸ் அத்தியட்சகர் தர்சிகா குமாரி, நிதிக் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகளைக் கையாளும் பிரிவுகளை வழி நடத்தும் (விஷேடமாக மத்திய வங்கி பிணை முறி மோசடி) சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பியசேன அம்பாவல, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமால, விஷேட விசாரணைப் பிரிவை வழிநடத்தும் (மாவனெல்லை புத்தர் சிலை உடைப்பு, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் முக்கிய விவகாரங்களை விசாரிக்கும் பிரிவுகள்) பொலிஸ் அத்தியட்சகர் விக்ரமசேகர, பொலிஸ் அத்தியட்சகர் ஜயதிலக உள்ளிட்ட பலரே இவ்வாறு இடமாற்றம் கோரியுள்ளனர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ் சேவை அடிப்படையில் தம்மை விட கனிஷ்டமானவர் எனவும், அவர் தாம் தாக்கல் செய்துள்ள வழக்கொன்றில் பிரதிவாதி யும் கூட என்பதைச் சுட்டிக் காட்டியுள்ள மேற்படி அதிகாரிகள், அதனால் அவருக்கு கீழ் சேவையாற்றுவது சாத்தியமில்லை என்பதால் தம்மை வேறு இடங்களுக்கு இடமாற்றுமாறு கோரியுள்ளனர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுரத்த பண்டாரநாயக்க ஆகியோருக்கு எதிராக, சி.ஐ.டியில் தற்போது இடமாற்றம் கோரியுள்ள அதிகாரிகள் உட்பட பலர் ஒன்று சேர்ந்து உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். அது, உயர்நீதிமன்றின்உத்தரவொன்றைத் தவறாக வரைவிலக்கணம் செய்து அதனை மையப்படுத்தி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவையும் ஏமாற்றி பதவி உயர்வு பெற்றுக் கொண்டதாக குற்றச்சாட்டை முன்வைத்ததாகும்.

இவ்வாறான பின்னணியில் பிரசன்ன அல்விசை சி.ஐ.டி.யின் பணிப்பாளராக நியமித்துள்ளதால் அவரின் கீழ் சேவையாற்ற முடியாது எனக் கூறியே சிரேஷ்ட அதிகாரிகள் இடமாற்றம் கோரியுள்ளனர்.

சி.ஐ.டி.யின் பணிப்பாளராக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டப்ளியூ திலகரத்ன அமைச்சரவை பாதுகாப்பு பிரிவுக்கு இடமாற்றப்பட்ட நிலையில், வெற்றிடமான சி.ஐ.டி.பணிப்பாளர் பதவிக்கு பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் பணிப்பாளராகச் செயற்பட்ட பிரசன்ன அல்விஸ் நியமிக்கப்பட்டு, கடந்த ஞாயிறன்று கடமைகளைப் பொறுப்பேற்றார். இவ்வாறான பின்னணியிலேயே சிரேஷ்ட அதிகாரிகள் இடமாற்றம் கோரியுள்ளனர்.

இதுஒருபுறமிருக்க குறித்த பணிப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸ், சித்திரவதைகளுக்குப் பெயர்போன ஒருவராகச் சித்தரிக்கப்படுகின்றார். இவர் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளமையால் அந்தப் பிரிவுக்கான சர்வதேச உதவிகள் உடனடியாக மீளாய்வு செய்யப்படவேண்டும் என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)

*கொரோனாவை ஒழித்ததுபோல்*

# டெங்கு ஒழிப்புக்கும் ஒத்துழையுங்கள்

கொழும்பு, மே 30
கொரோனா ஒழிப்புக்கு நாட்டு மக்கள் வழங்கிய ஒத்துழைப்பை டெங்கு ஒழிப்புக்கும் வழங்கவேண்டும் என்று அரசு கோரிக்கை விடுப்பதாக சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாவிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாப்பதைப் போன்று டெங்கு அச்சுறுத்தலிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டியுள்ளது. கடந்த ஆண்டு டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு 150 பேர் உயிரிழந்தனர். இந்தவருடத்தில் இந்த ஆண்டு இதுவரையில் 20 பேர் மாத்திரமே உயிரிழந்துள்ளனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய டெங்கு ஒழிப்புக்கான விசேட ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கொரோனா கட்டுப்படுத்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குவதைப் போன்றே டெங்கு ஒழிப்புக்கும் நாட்டு மக்களின் ஒத்துழைப்பை நாம் கோருகின்றோம். அதிக காய்ச்சல் காணப்படுபவர்கள் சில நேரங்களில் டெங்கு நோய்க்கு உள்ளாகக்கூடும். அவ்வாறானவர்கள் மாவட்டத்திலுள்ள பிரதான மருத்துவமனைகளுக்குச் சென்று உடனடியாக சிகிச்சை பெற வேண்டும்.மேலும் தாம் வாழும் சுற்றுச்சூழலை தூய்மையாகவும் வைத்திருக்கவேண்டும் - என்றார். (த)



# தொண்டமானின் யோசனைகளை செயற்படுத்த மஹிந்த பரிந்துரை

கொழும்பு, மே 30
காலஞ்சென்ற அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் மலையக மக்கள் தொடர்பில் முன்வைத்த யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீ காரத்தைப் பெறக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆறுமுகம் தொண்டமான் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழப்பதற்கு முன்னர் பிரதமரைச் சந்தித்தபோது மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார் என்று பிரதமர் அலுவலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

மலையக மக்களின் குடியிருப்பு தொடர்பிலான பரிந்துரையை காலஞ்சென்ற அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் பிரதமரிடம் கையளித்தார்.

மலையக மக்களின் குடியிருப்பு, பாடசாலை மற்றும் உட்கட்டமைப்பு பிரிவுகளில் காணப்படுகின்ற பிரச்சினைகள் குறித்த பரிந்துரையில் உள்ளடக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (த)

# நாடாளுமன்றின் அதிகாரம் மே 2 முதல் சபாநாயகர் வசம்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மே 30
மூன்று மாதங்கள் மாத்திரமே ஆயுட்காலம் கொண்ட ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவிப்பு, அரசமைப்பின் பிரகாரம் ஜூன் மாதம் 2 ஆம் திகதியுடன் காலாவதியாகின்றது. அன்றிலிருந்து நாடாளுமன்றைக் கூட்டும் அதிகாரம் சபாநாயகர் வசமாகின்றது" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இந்த அரசியல் நெருக்கடியை தவிர்க்க உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு முக்கியமாகின்றது என்றும் தெரிவித்தார்.

17ஆவது அரசமைப்பில் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு நிறுவப்பட்டாலும் 19 ஆவது அரசமைப்பின் ஊடாகவே வலுப்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ரணில் விக்கிரமசிங்கவின் கொள்ளுப்பிட்டிய இல்லத்தில் கடந்த புதன்கிழமை கட்சி உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகபொருளாதார சுட்டெண்ணுக்கமைவாக இலங்கை படுமோசமானதொரு நிலையிலேயே உள்ளது. எனவேதான் நாட்டின் உண்மை நிலையை தெரியப்படுத்துமாறு அரசிடம் கோரினேன்.

பெரியதொரு கடன் பொறிக்குள் சிக்கிவிட்டுள்ளோம். சுற்றுலாத்துறை மற்றும் ஆடை உற்பத்தி என்பனவற்றின் மீது மாத்திரம் நம்பிக்கைவைத்து செயற்பட முடியாது. உரிய திட்டமொன்று அவசியம்.

அந்நிய செலாவணியை அதிகரிக்க புதிய வாய்ப்புகள் தேடப்பட வேண்டும். இதனை மையப்படுத்திய வெளிவிவகார கொள்கையொன்று அவசியமாகவுள்ளது.

ஓகஸ்ட் மாதம் 15 மற்றும் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்புகளே அதிகம் உள்ளன. நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரமே தேர்தல் ஆணைக்குழு செயற்படவேண்டியதுள்ளது. 70 நாள்கள் அவசியம் என்பதையும் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

எனவே ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலேயே நாம் தற்போது செயற்பட வேண்டும். தேர்தல் ஆணைக்குழுவை பாதுகாத்தால் மாத்திரமே நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்படும். ஆணைக்குழுவை தற்போது விமர்சிப்பவர்கள் எதிர்க்கட்சிக்கு சென்றபின்னர் அதன் தேவையை உணர்வார்கள்.

எனவே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தல்கள் ஆணைக்குழு மக்கள் குறித்து சிந்தித்தே செயற்பட வேண்டும். அதேபோன்று மக்களின் உரிமைகளுக்காக நாம் எப்போதும் முன்னிற்க வேண்டும்.

அரசியல் கட்சி என்ற வகையில் தற்போது நாம் தேர்தல்கள் ஆணைக்குழுவை பாதுகாக்க வேண்டும். ஆணைக்குழுவை இல்லாதொழிக்கும் வகையிலேயே தற்போது செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. ஏனெனில் 17 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் ஊடாக சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு நிறுவப்பட்டாலும் அதிகாரக் கட்டமைப்பொன்று காணப்படவில்லை. ஆனால் 19 ஆவது அரசமைப்பின் ஊடாக தேர்தல்கள் ஆணைக்குழுவும் வலுப்பெற்றது.

நாடாளுமன்றத்தை கலைத்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு காலாவதியாகாது என்றே சட்டமா அதிபர் கூறுகின்றார். ஆனால் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதியுடன் நாடாளுமன்ற தேர்தலுக்கான ஜனாதிபதியின் குறித்த வர்த்தமானி காலாவதியாகிவிடும். அன்றிலிருந்து நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கான அதிகாரம் சபாநாயகருக்கு செல்கின்றது. இந்த சிக்கலை தவிர்க்க உயர் நீதிமன்றத் தீர்ப்பு முக்கியமாகின்றது. எனவே நாடாளுமன்றை மீண்டும் கூட்டும் அதிகாரம் சபாநாயகருக்கு உள்ளது என்ற கட்டளையை நீதிமன்றம் ஊடாக பெற்றுக்கொள்ளவே நாம் எதிர்பார்க்கின்றோம். இவ்வாறானதொரு கட்டளை ஏற்பட்டால் மீண்டும் நாடாளுமன்றத்தை கலைப்பது குறித்து ஜனாதிபதி தீர்மானிக்க முடியும்.

அவ்வாறு இல்லையென்றால் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் ஓகஸ்ட் மாதத்துடன் முடிவடைகின்றமையால் தேர்தல் குறித்த முழு அதிகாரமும் ஆணைக்குழுவுக்கே செல்லும்-என்றார்.

# போர்க் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் எதுவும் இல்லை

## மீண்டும் வலியுறுத்தியது இலங்கை

**கொழும்பு, மே 30**

**இலங்கை இராணுவத்துக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரங்கள் எதுவுமில்லை என இலங்கை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**

இந்து நாளிதழில் வெளியான கட்டுரையொன்று குறித்து அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே ஜனாதிபதி ஊடகப்பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

இலங்கையின் பல படைவீரர்கள் குறிப்பாக சிரேஸ்ட அதிகாரிகள் போரின் போதும் அதன் பின்னரும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச் சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி ஊடகப்பிரிவு, எந்த ஆயுதமோதலின் போதும் தனிநபரின் மனித உரிமையைப் பேணுவது மழைகாலத்தில் சேறு உருவாகுவதை தடுப்பதைப் போன்ற விடயம் என தெரிவித்துள்ளது.

போரில் கொந்தளிப்பான நிலை காரணமாக சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள், ஒருவர் பின்பற்ற வேண்டிய தெளிவான விடயங்களை முன்வைக்கவில்லை. இலங்கைப் படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டனர் என எந்த உத்தியோகபூர்வ ஆவணமும் நிருபிக்கவில்லை. ரத்னாயக்கவுக்குத் தண்டனை வழங்குவதற்கு 13 வருடங்கள் எடுத்த போதிலும் இலங்கை நீதிமன்றம் இன்னும் நியாயமான சந்தேகங்களைக் கொண்டுள்ளது. இலங்கை 14ஆயிரத்து 500 விடுதலைப்புலிகள் உறுப்பினர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தது. அவர்கள் மத்தியில் ரத்னாயக்க போன்று மோசமான நடவடிக்கைளில் ஈடுபட்டவர்கள் உள்ளனர். இதன் காரணமாக மன்னிப்பு வழங்குவது நியாயமற்றதோ அல்லது ஒழுக்கமற்றதோ இல்லை. இலங்கை இராணுவத் தளபதி போர்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான ஜெனரல் என தெரிவிக்கப்பட்டிருப்பது மிகவும் நியாயமற்றது என்றும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ப)




## நாட்டில் மழையுடனான காலநிலை நீடிக்கும்

கொழும்பு,மே 30

நாட்டில் தென்மேற்கு பருவப் பெயர்ச்சிக் காலம் படிப்படியாக ஆரம்பித்திருப்பதால் நாட்டில் நிலவுகின்ற மழையுடனான வானிலை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் வரை நீடிக்குமென வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள் ளது.

மத்திய, சப்ரகமுவ, மேல், வடமேல் ஆகிய மாகாணங்களில் அடிக்கடி மழை பெய்வதுடன் சப்ரகமுவ, தென், மேல் ஆகிய மாகாணங்களில் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக் கும் அதிகமான மழை பெய்யுமென வளி மண்டலவியல் திணைக்கள அதிகாரி மொஹம்மட் சாலிஹின் தெரிவித்தார். கிழக்கு ஊவா மாகாணங்களிலும், பொலன்னறுவை மாவட்டத்திலும் பல இடங்களில் இரவு வேளையில் மழை பெய்யுமெனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# பெருந்தோட்ட வர்க்கத்துக்கான குரல்களில் ஒன்று மௌனித்தது

## சுரேஷ் பிரேமச்சந்திரன் இரங்கல்

யாழ்ப்பாணம், மே 30

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான அமரர் ஆறுமுகன் தொண்டமானது குரலும் பெருந்தோட்டத் தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகத் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது. அன்னாரின் எதிர்பாராத இறப்பால் அவரது குரல் மௌனிக்கச் செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தை அடுத்து தலைமையேற்பவர்கள் நிரப்ப வேண்டும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப்பேச்சாளர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவு குறித்து அவர் அனுப்பி வைத்த இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளாவது:

சௌமியமூர்த்தி தொண்டமானின் இறப்புக்குப் பின்னர், மலையக மக்களின் தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும் கட்சியையும் தலைமையேற்றி வழிநடத்திச் சென்றவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் பேரனான அமரர் ஆறுமுகம் தொண்டமானே. மலையக மக்களின் தேவைகளும் பிரச்சினை களும் இன்னமும் பல நூற்றுக் கணக்கில் இருக்கின்றன. அவற்றைத் தீர்த்து வைப்பதற்கான கடமையும் பொறுப்பும் மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவை. அந்த வகையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு ஒரு பாரிய கடமை தொடர்ந்தும் இருந்துகொண்டே இருந்தது. அதனைப் பொறுப்புடன் வழிநடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்தக் கட்சியை எதிர்காலத்தில் தலைமைதாங்கிச் செயற்படக்கூடிய அனைவருக்கும் உரியது. அமரர் ஆறுமுகன் தொண்டமான் இளம் வயதிலிருந்தே தமது தாத்தாவான சௌமியமூர்த்தி தொண்டமானுடன் இணைந்து பணியாற்றியவர். அவரது செயலாளராகக் கடமையாற்றியவர். இதன் காரணமாக மலையக மக்களின் பிரச்சினைகள் அனைத்தையும் நுணுக்கமாக அறிந்துகொண்டவர். தொழிற்சங்கத்தைப் பற்றியும் அரசியலைப் பற்றியும் ஆழமாகப் புரிந்துகொண்டவர். கம்பனி முதலாளிகளுடன் தமது மக்களுக்காகப் பேரம் பேசுவதிலும் வல்லமை கொண்டவர். இவ்வாறான பல்வேறு திறமைகள் இருந்ததன் காரணமாகத்தான் மலையகத் தமிழ் மக்களின் தலைவராகத் திகழ்ந்தார். அவர் அரசியலில் இன்னமும் நீண்டதூரம் பயணிக்க வேண்டியிருந்தது. ஆனால் காலம் அவரை விரைவிலேயே தன்வசப்படுத்திக்கொண்டதானது மலையக மக்களை பெரும் துன்பக் கடலில் ஆழ்த்தியுள்ளது - என்றுள்ளது.

(ப-20)

# பிரதமர் மகிந்த ராஜபக்ச ஐக்கியத்தின் சின்னமாம்

## சுப்பிரமணியன் சுவாமி கூறுகிறார்

கொழும்பு, மே 30

பிரதமர் மகிந்த ராஜபக்சவை ஐக்கியத்தின் சின்னமெனக் கருதுவதாக இந்திய ராஜ்யசபா உறுப்பினர் சுப்பிரமணியன் சுவாமி தனது டுவிட்டர் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தியாவைப் போன்று இலங்கையிலும் சிங்கள பௌத்தர்களும், இந்து தமிழர்களும் ஒரே சமூகத்தினர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவைப் போன்று இலங்கையிலும் இந்து தமிழர்களும், சிங்கள பௌத்தர்களும் ஒரு சமூகத்தவர்கள், முஸ்லிமும், கிறிஸ்தவமும் இல்லாத ஒருவரே இந்து வென்று இந்திய அரசியலமைப்பின் 20ஆவது சரத்து வரையரை செய்கின்றது. இலங்கையில் அமைதி காணுவதற்கான வழியும் அதுவே ஆகும். அதனால் பிரதமர் மகிந்த ராஜபக்சவை அந்த ஐக்கியத்துக்கு வழிகாட்டும் ஒரு சின்னமாகவே நான் கருதுகின்றேன் - என்று அவர் மேலும் பதிவிட்டுள்ளார். (ப)

# யாழில் மீன்பிடி உற்பத்தி மூன்றிலொன்றாக வீழ்ச்சி

## மாவட்ட உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 30**

**யாழ்ப்பாணத்தில் கடந்த இரு மாதங்களாக ஏற்பட்ட முடக்க நிலைமைகள் காரணமாக வழமையான மீன்பிடி உற்பத்தியின் மூன்றில் ஒரு பங்கு உற்பத்தியே கிடைத்துள்ளது என்று யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் த.சுதாகரன் தெரிவித்தார்.**

எனினும், தற்போது யாழ்ப்பாணத்தின் மீன்பிடி வழமைக்குத் திரும்பி வருகின்றது என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் மாதாந்தம் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் கிலோ மீன்கள் பிடிபடுகின்றமை வழமை. எனினும், நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக சில மாதங்கள் மீன்பிடி தடைப்பட்டிருந்தது. சில மீனவர்கள் தாமாக கடலுக்குச் செல்வதை தவிர்த்து வந்தனர். மீன்கள் ஏற்றுமதி செய்வதிலும் சில தடங்கல்கள் இருந்தன. கடந்த இரு மாதங்களாக 50 ஆயிரம் தொடக்கம் 60 ஆயிரம் கிலோ வரையான மீன்பிடி உற்பத்தியே இடம்பெற்றது. எனினும், தற்போது உற்பத்தி வழமைக்குத் திரும்பியுள்ளது.

சில நாள்களாக யாழ்ப்பாணத்தில் வீசிய அதிக காற்று காரணமாக சில மீனவ குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. சிலரின் படகுகளும் சேதமடைந்துள்ளன. இவ்வாறு சேதமடைந்த படகுகள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளமையால் அவர்களுக்கான காப்புறுதிகள் கிடைத்துள்ளன. சிலருடைய வாடி வீடுகள் சேதமடைந்துள்ளன. காற்றின் தாக்கம் காரணமாக பாதிப்படைந்த குடும்பங்களின் விவரங்கள் கடற்றொழில் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன- என்றார். (த)



## காயங்களுடன் சிக்கிய கருஞ்சிறுத்தை சாவு

ஹற்றன், மே 30

மஸ்கெலியாவில் மரக்கறி தோட்டத்தில் வைக்கப்பட்டிருந்த கம்பி வலையில் கடந்த 26ஆம் திகதி உயிருடன் பிடிக்கப்பட்ட கருஞ்சிறுத்தை நேற்று உயிரிழந்துள்ளதாக ஹற்றன் நல்லதண்ணி வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மஸ்கெலியா நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லக்ஷபான வாழைமலை பகுதியிலுள்ள மரக்கறித் தோட்டத்தில் கம்பி வலைக்குள் அது சிக்கி காயங்களுடன் மீட்கப்பட்டிருந்தது.

கால்நடை மருத்துவர்கள் அதற்கு சிகிச்சை யளித்து வந்தனர். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சிவனொளிபாத மலைக்கு அருகிலுள்ள நல்லதண்ணி பகுதியில் இது போன்ற 6 கருஞ்சிறுத்தைகள் வாழ்ந்து வருகின்றன என்றும் வனவிலங்கு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (த)

## பனம் பல்பொருள் விற்பனையகம் சாவகச்சேரியில்

சாவகச்சேரி, மே 30

பனம் பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்று சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு அருகிலுள்ள கட்டடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் பனைசார் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் நுகர்வோருக்கு நியாய மான விலையில் பனைசார் உற்பத்திப் பொருள்கள் கிடைப்பதற்காகவும் அந்த இடத்தில் இது ஆரம்பிக்கப்படுகின்றது என்று சங்கத்தினர் தெரிவித்தனர்.

விற்பனைப் பிரிவை இந்த மாதம் ஆரம்பிக்க இருந்தபோதும், கொரோனா தொற்றால் பிற்போடப்பட்டது. வரும் ஜூன் மாதம் இது திறக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவித்தனர். (த-9)



## இலங்கையிலுள்ள இந்தியர்களில் 176 பேர் நேற்று நாடு திரும்பினர்

கொழும்பு, மே 30

இலங்கையில் சிக்கியிருந்த இந்திய பிரஜைகள் 176 பேருடன் ஏர் இந்தியா விசேட விமானம் (AI 0276) கொழும்பிலிருந்து நேற்று மும்பை, புபனேஸ்வர் மற்றும் கல்கத்தா ஆகிய நகரங்களை நோக்கி புறப்பட்டது என்று இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

கொவிட்19 நோய் காரணமாக உலகளாவிய ரீதியில் சிக்கியிருக்கும் இந்திய பிரஜைகளை இந்தியாவுக்கு அழைத்து வருவதற்காக இந்திய அரசு முன்னெடுக்கும் மிகப்பெரிய மீட்பு நடவடிக்கையாக 'வந்தே பாரத் நோக்கு' திட்டத்தின் கீழ் இந்த விமான பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாடுதிரும்ப முடியாமல் இலங்கையில் தங்கியிருக்கும் இந்தியர்கள் இதுவரையில் தம்மை இந்திய தூதரகத்தில் பதிவுசெய்ய தவறியிருப்பின் இணையத்தளத்தில் https://hcicolombo.gov.in/COVID_helpline பதிவு செய்யுமாறு கோரப்படுகிறார்கள். நாடுதிரும்ப முடியாமல் இலங்கையில் தங்கியிருக்கும் இந்திய பிரஜைகள் பொறுமையைப்பேணுமாறும், இந்திய தூதரகத்தின் இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்களில் பதிவிடப்படும் அறிவித்தல்களை அறிந்துகொள்ளுமாறும் தூதரகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (த)

## ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் விழுங்கியது 400 கோடி ரூபா?

### இதை விசாரிக்க மற்றொரு ஆணைக்குழு

கொழும்பு, மே 30

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக்காலத்தில் 400 கோடி ரூபா செலவிட்டு விசாரணை நடத்திய நான்கு ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் விசாரணை அறிக்கைகள் ஜனாதிபதி செயலகத்துக்கு கிடைத்துள்ளன எனினும், இந்த அறிக்கைகளில் வெளியிடப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு அமைய இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்த ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நடத்திச் செல்வதற்கான வாகனங்கள், அவற்றுக்கான எரிபொருள் செலவுகள் உட்பட பல்வேறு பணிகளுக்காகவே 400 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று அரச கணக்காய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில ஆணைக்குழுக்கள் பல்வேறு அரச நிறுவனங்களின் தலைவர்களிடம் விசாரணை நடத்தி, ஆவணங்களை பெற்று, சாட்சியங்களைவிசாரித்து அனைத்து விசாரணைகளையும் நிறைவு செய்து, நல்லாட்சி அரசுக்கு முன்னர் ஆட்சியில் இருந்த ராஜபக்ஷ அரசில் அரச நிறுவனங்கள் மற்றும் அந்த அரசின் அமைச்சர்கள் செய்தனர் என்று கூறப்படும் நிதி மோசடிகள் தொடர்பாக விசாரிக்க 400 கோடி ரூபாவுக்கும் மேல் செலவிடப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நியமித்ததன் மூலம் ஏற்பட்டுள்ள நிதிச் செலவுகளை விசாரிக்க மேலும் ஒரு விசாரணை ஆணைக்குழுவை நியமிக்க நேரிட்டுள்ளது என்று அரச கணக்காய்வு திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (த)

## சாவகச்சேரி மீன் சந்தையில் சில விதிமுறைகள் கட்டாயம்

### நகரசபைத் தவிசாளர் தெரிவிப்பு

சாவகச்சேரி, மே 30

சாவகச்சேரி பொதுச் சந்தை நாளைமறுதினம் திங்கட்கிழமை திறக்கப்படுவதால், கடலுணவு விற்பனைப் பிரிவில் வியாபாரம் செய்வோரும் நுகர்வோரும் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுவதுஅவசியம் என்றும் சில விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார்.

சுகாதாரப் பகுதியினரும் பொலிஸாரும், கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர். இதற்கு வியாபாரிகளும் நுகர்வோரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் கோரினார்.

நகரசபை பொன் விழா மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற கடலுணவு வியாபாரிகளுடனான கலந்துரையாடலில் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

நுகர்வோர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கட்டடத்தினுள் ஒரு வழிப்பாதை ஊடாகவே உள்நுழைய அனுமதிக்கப்படுள்ளனர். சமூக இடைவெளியைக் கருத்திற்கொண்டு நுகர்வோரை அதிகநேரம் காத்திருக்க வைக்கவேண்டாம். விற்பனைக் கூடத்தினுள் காணப்பட்ட மீன் வெட்டும் வேலை சந்தைக்கு வெளிப்புறமே இயங்கும் என்றும் உள்வியாபாரிகள் மீன் வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. பிற்பகல் 3 மணியுடன் அந்த இடம் கழுவி கிருமித்தொற்று நீக்கி விசிறுவதற்கு வசதியாக வியாபாரிகள் பிற்பகல் 2 மணியுடன் வியாபாரத்தை நிறுத்தி வெளியேறவேண்டும் என்றும் தெரிவித்தார்.

கடலுணவுகள் வாங்கவரும் பொதுமக்கள் உட்செல்லும் வழியால் வெளியேறுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. வெளிச் செல்வதற்கு என்று ஒதுக்கப்பட்ட வழியூடாக மட்டுமே வெளியேற வேண்டும். சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுவது அவசியம் என்பதால் முகத்திரை அணிந்திருக்கவேண்டும். குறிப்பிட்ட அளவினரே விற்பனை பகுதிக்குள் செல்ல அனுமதிக்கப்படுவர் என்பதனால் தனியாள் இடைவெளியைப் பின்பற்றுங்கள் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (த-9)

## பொன்சேகாவுக்கு எதிராக விசாரணைகள் தீவிரம்!

கொழும்பு, மே 30

கொரோனா வைரஸ் குறித்து சர்ச்சைக்குரிய அறிக்கை வழங்கியது தொடர்பிலான விசாரணைகளுக்காக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கொழும்பு குற்றவியல் பிரிவில் நேற்று முன்னிலையானார். இவரிடம் சுமார் ஒரு மணி நேரம் வரையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மார்ச் மாதம் 18ஆம் திகதி பொன்சேகா செய்தியாளர் சந்திப் பொன்றை நடத்தியிருந்தார். அதில் மூன்று நோயாளர்களின் இறப்புத் தொடர்பாக சர்ச்சைக்குரிய கருத்தைத் தெரிவித்திருந்தார். இதையடுத்தே அவர் நேற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். (ம)

# ஜூன் முதல் வாரத்தில் யாழில் டெங்கு ஒழிப்பு

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 30**

**யாழ். மாவட்டத்தில் ஜூன் மாதம் முதல் வாரத்தில் டெங்கு ஒழிப்பு வாரம் கடைப் பிடிக்கப்படவுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் தெரிவித்தார்.**



யாழ்ப்பாண மாவட்ட சுகாதார மேம்பாட்டுக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.
குறித்த கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்
தற்போதுள்ளநிலையில்டெங்குநோயைக் கட்டுப்படுத்தும் முகமாக இந்தக் கூட்டத்தில் பிரதேச மட்டக் குழுவினுடைய செயற்பாடுகள் அதேபோன்று கிராமிய சுகாதாரக் குழுக்கள் திறம்படச் செயற்படுவதைப் பற்றி அவை முறைப்படி நடத்தப்பட வேண்டும் எனவும் அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் ஆராயப்பட்டுள்ளது.
குறிப்பாக கிராம மட்டச் செயற்பாட்டுக் குழுவில் நுளம்பு ஒழிப்புத் தொடர்பான செயற்பாடுகளை கிரமமாக மேற்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் அவ்வேலைத்திட்டத்தை மேற்கொள்ளும்போது எதிர்நோக்குகின்ற இடர்பாடுகளைக் களைவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமெனவும் கோரி நிற்கின்றோம். முக்கியமாக வெற்றுக் காணிகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. வெற்றுக்காணிகளில்அந்தக்காணிச் சொந்தக்காரர்கள் அந்தக் காணியை முறைப்படி அதாவது குறிப்பாக பற்றைகளை வெட்டி அகற்றி அதற்கு மேலாக அங்கு காணப்படுகின்ற கொள்கலன்கள் சிரட்டை பிளாஸ்டிக் கொள்கலன் போன்றவற்றை அகற்றுவது பிரதானமானதாகக் காணப்படுகின்றது. அதே போன்று வீடுகளிலும் நீர் வழிந்தோடும் பகுதிகளை அடிக்கடி துப்பரவு செய்ய வேண்டிய கடப்பாடும் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது கொவிட் 19க்கு இணையாக இந்த டெங்குப் பரவலும் நாட்டில் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஆகவே இந்த டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு யாழ் மாவட்டத்தில் நாங்கள் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. ஆகவே இந்த டெங்கு தொடர்பாக ஒரு விழிப்புணர்வு வாரமொன்று எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வாரத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கிராம மட்டம், பிரதேசமட்டம் மற்றும் மாவட்ட மட்டங்களில் நடைமுறைப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறித்த விழிப்புணர்வு மேற்கொள்ளப்படவுள்ள திகதிகள் தொடர்பில் அதிகாரிகளால் விரைவில் அறிவிக்கப்படும். எனவே இந்த வாரத்தில் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இடம் பெற உள்ளது. கிராம மட்டம், பிரதேச மட்டம், மாவட்ட மட்டம் என்ற நிலையில் இடம்பெறவுள்ள குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் டெங்கு நோய் ஏற்பட சாதகமாகவுள்ள இடங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றினை அகற்றி டெங்கு நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்களும் இந்த குறித்த விழிப்புணர்வு வாரத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது - என்றார். (ஐ)

## பெலாடுஸிலிருந்து 277 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, மே 30
நாடு திரும்ப முடியாமல் பெலாடுஸ் நாட்டில் சிக்கியிருந்த 277 இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். சிறிலங்கன் விமான சேவையின் விசேட விமானம் மூலம் நேற்றுமுன்தினம் இரவு 11.45 மணியளவில் இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்துவரப்பட்டனர். இவர்கள் அனைவரும் உரிய சுகாதார வழிமுறைகளுக்கமைய தனிமைப்படுத்தலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (து)

## விபத்துக்களில் இருவர் காயம்

சாவகச்சேரி, மே 30
வீதி விபத்துக்களில் காயமடைந்த பெண் உட்பட இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்துக்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளன.
கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த 32 வயது நபரும், நுணாவில் மேற்கைச் சேர்ந்த 20 வயது பெண்ணுமே விபத்துக்களில் சிக்கி காயமடைந்தனர். (ஐ-9)

## குருதிக் கொடை முகாம்

கிளிநொச்சி, மே 30
கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தால் குருதிக்கொடை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கிளிநொச்சி பழைய மருத்துவமனை மண்டபத்தில் குருதிக்கொடை முகாம் நடைபெறவுள்ளது.
குருதிக்கொடையாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-214)

## சலுகை வட்டியில் வீட்டுக் கடன்

*அமைச்சரவையில் ஒப்புதல்*

கொழும்பு, மே 30
நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்குச் சலுகை வட்டி அடிப்படையில் வீட்டுக் கடன் திட்டத்தை வழங்க அமைச்சரவையில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
அரசுக்குச் சொந்தமான காணிகளில் வீடுகளை அமைக்கும் வகையில் 20 முதல் 30 ஆண்டுகளுக்குத் தவணை அடிப்படையில் மீளச் செலுத்தும் வகையில் இந்த வீட்டுக் கடன் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தவுள்ளது. இந்த தகவலை அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். இந்தத் திட்டத்தில் வீட்டின் விலையில் நிலத்தின் மதிப்பு சேர்க்கப்படாது. இந்த முயற்சி நடுத்தர வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கு மலிவு விலையில் வீடுகளை வழங்குவதற்கான அரசின் நோக்கமாகும். இந்தத் திட்டம் அரசு மற்றும் தனியார் துறையின் கூட்டு முயற்சியாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ப)

## ஆறுமுகன் தொண்டமானின் இறுதிக் கிரியை ஞாயிறன்று

கொழும்பு, மே 30
ரம்பொடை வேவல்டண்னில் அமைந்துள்ள பூர்வீக இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடல், இன்று காலை 7.30 மணிக்கு லபுக்கலை, நுவரெலியா, நானுஓய, லிந்துலை, தலவாக்கலை வழியாக கொட்டகலை தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, நாளை ஞாயிற்றுக் கிழமை கொட்டகலை தொண்டமான் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் இருந்து ஹட்டன் டிக்கோயா வழியாக நோவூட் சௌமியமூர்த்தி தொண்டமான் விளையாட்டரங்குக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 4 மணிக்கு இறுதிக்கிரியைகள் அரச மரியாதையுடன் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## கிழக்கு ஆளுநரைச் சந்தித்த பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர்

கொழும்பு, மே 30
இலங்கை நாட்டுக்கான பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) முஹமட் சாட் கட்டாக் நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தை சந்தித்தார். திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பிலும் இதற்காக பூரணமான உதவி ஒத்தாசைகளை வழங்குவதாகவும் தெரிவித்த உயர்ஸ்தானிகர், சுற்றுலா அபிவிருத்தி, விவசாயத் துறை உள்ளிட்ட பொருளாதார மேம்பாட்டுக்கு கைகோர்ப்பதாகவும் தெரிவித்தார். இதன் போது கிழக்கு ஆளுநரால் நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது. (ஐ-40)



## பாடசாலையில் துப்புரவுப் பணி

வவுனியா, மே 30
வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலத்தில் துப்புரவுப் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.
கொரோனோ வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நோக்குடன் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக நாடளாவிய ரீதியில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டது.
இந்நிலையில் தற்போது ஊரடங்கு தளர்த்தப்பட்டு வருகின்ற நிலையில் பாடசாலைகளின் கல்வி செயற்பாடுகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஆலோசித்துவருகின்றது.
அதற்கமைய பாடசாலை ஆரம்பிக்கப்பட்டால் முன்னெடுக்கப்படவேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பாக வலயகல்வி அலுவலகங்களால் பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன் ஒருகட்டமாக பாடசாலைகளை துப்புரவு செய்யும் பணிகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.
இந்நிலையில் நேற்று வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலத்தில் ஆசியர்கள் பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் துப்புரவு பணி முன்னெடுக்கப்பட்டது. (ஐ-110)

## கடவுளின்...

எது.
கொடுங்கோலர்களுக்கும் அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கும் ஒரு தண்டனையைக் கடவுள் வழங்கியுள்ளார் என்று ஐ.எஸ் செய்தித் தொடர்பாளர் அபு ஹம்சா அல்குரைஷ் அறிவித்துள்ளார். 'உங்களுக்காக கடவுளின் இந்த தண்டனை தொடர்பில் இன்று நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்' என்று குறிப்பிட்ட ஐ.எஸ் செய்தித் தொடர்பாளர், கொவிட் 19 தெய்வீகத் தண்டனை என்றும் அது ஜிஹாதி உணர்வை எதிரொலிக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஓ.5)

## கத்திக்...

வவுனியா, கற்பகபுரம் பகுதியில் நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவத்துக்குக் காதல் விவகாரம் காரணம் என்று கூறப்படுகின்றது.
அதேவேளை, அலகல்லுப் பகுதியில் நடந்த கத்திக்குத்துச் சம்பவத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.
இந்தச் சம்பவங்கள் தொடர்பாக வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-18,110)

## பொதுத்...

கூட்டமைப்பின் தலைவருக்கும், பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்பு அதிகளவு ஆசனங்களைக் கைப்பற்ற வேண்டும் என்று கட்சியின் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார். இம்முறை சவால்கள் அதிகமாக இருக்கும் என்று பங்காளிக் கட்சித் தலைவர்களில் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். மக்கள் மத்தியில் கூட்டமைப்புத் தொடர்பில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். மக்கள் மத்தியில் ஏற்பட்ட அதிருப்திக்கு கூட்டமைப்புத்தான் காரணம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.
கூட்டமைப்புக்குள் இருக்கின்ற மோதல் காரணமாகவே இந்த நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. சமூக வலைத் தளங்களில் கூட்டமைப்பு வேட்பாளர்கள் மோதிக் கொள்கின்றனர். இவை தவிர்க்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.
இதன் போது கருத்து வெளியிட்ட சம்பந்தன், ஏனைய கட்சிக்காரர்களுக்கும் மக்கள் மத்தியில் பெரியளவு செல்வாக்கு இல்லையே என்று குறிப்பிட்டுள்ளார்.
ஆனாலும், தேர்தலில் வாக்களிப்பு வீதம் குறைந்தால் எமது கட்சிக்கே அதிகம் பாதிப்பு என்று பங்காளிக் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். கொரோனா அச்சம் காரணமாக தேர்தலில் பாதிப்பு ஏற்படும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஓ5)

## கொரோனா...

ளின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 558 ஆக அதிகரித்துள்ளது.
நேற்று புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் வெளிநாடுகளிலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்டவர்களும், கடற்படையினரும் அடங்குகின்றனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
இதேவேளை, தொற்றுக்குள்ளான மேலும் 9 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 754 ஆக அதிகரித்துள்ளது.
கொரோனாவால் இதுவரை பாதிக்கப்பட்டவர்களில் தற்போது 794 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர்.
மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் சந்தேகத்தில் 75 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (எ-22)

## தனிமைப்படுத்த...

ஆர். பரிசோதனையில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.
முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் முகாமில் உள்ள ஒருவருக்கே கொரோனா தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.
நேற்று 39 பேருக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும், அவர்களில் ஒருவரைத் தவிர ஏனையோருக்குக் கொரோனா தொற்று இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## குளோரின்...

எது என்றும் வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா, மகாறம்பைக்குளத்தில் வைத்து இவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
குளோரின் விற்பவர்கள் போன்று நடித்து அவர்கள் வீடுகளில் பொருள்களைத் திருடியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
உக்குளாங்குளம், பண்டாரிக்குளம் ஆகிய இடங்களுக்கு முச்சக்கர வண்டியுடன் சென்ற இவர்கள், வீடு வீடாகச் சென்று குளோரின் விற்பனை செய்துள்ளனர். அப்போது வீட்டிலிருப்போர் காணாதவாறு பொருள்களைத் திருடியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. வீடொன்றில் இருந்த தேங்காய் எண்ணெய்க் கலனை இவர்கள் திருடிச் சென்றனர் என்று வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.
இது தொடர்பாக விசாரணை செய்த வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார், மகாரம்பைக் குளம் பகுதியைச் சேர்ந்த 3 பேரைக் கைது செய்தனர். அவர்களிடம் இருந்த முச்சக்கர வண்டியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. திருடப்பட்ட எண்ணெய்க் கலனும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அதேவேளை, சந்தேகநபர்கள் 10 கிலோ குளோரின் பைக்குள், குளோரினுடன் கோதுமை மாவையும் கலந்து விற்பனை செய்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. (எ-18)

## நுவரெலியா...

ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.
மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடல் ஊர்வலம் நடைபெறவுள்ள நிலையில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.
நேற்று (நேற்றுமுன்தினம்) அறிவிக்கப்பட்டவாறு நாளை 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் முழு நாளும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும்.
ஜூன் 1ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் தொடர்பான நேற்றைய (நேற்றுமுன்தினம்) அறிவிப்பில் மாற்றங்கள் இல்லை என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (எ)

## 5,6ஆம்...

திணைக்களம் அறிவித்துள்ளது.
பௌத்தர்களின் புனித நாள்களில் ஒன்றான பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

## கண்ணீர் அஞ்சலி



"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடத்தில் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
(யோவான் -11:25)

**விண்ணில்** 03.06.1969 — **மண்ணில்** 26.05.2020

அமரர்
**ஜோன்பிள்ளை பிரான்சிஸ் கெனடி**
**(கொலின்ஸ்)**
சக்கோட்டை, பருத்தித்துறை.

அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சின்னையா குடும்பத்தினர்.**
(பழைய வேத கோவிலடி)

## மரண அறிவித்தல்

**மலர்வு** 17 • 03 • 1959



**உதிர்வு** 27 • 05 • 2020

### நாகரட்ணம் கிரிதரன் (கிரி)

வசாவிளான் தெற்கை பிறப்பிடமாகவும் கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் கிரிதரன் கடந்த (27.05.2020) புதன்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரட்ணம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சரஸ்வதி தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற கருகம்பனை செல்லத்துரை மனோண்மணி (கனடா) தம்பதியரின் அருமை மருமகனும், சுமதியின் பாசமிகு கணவரும், தர்ஷன், மதுஷன், நிதுஷன் ஆகியோரின் தந்தையும், சண்முகரட்ணம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அருந்தவரட்ணம் (கண்ணன்-கனடா) ஆகியோரின் சகோதரரும் இந்துமதி, கேதாரகௌரி, நாவலன், அகிலன், சபேசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.05.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு (4239 Sources Blvd, Dollard - Des Ormeaux, Quebec H9B 2A6) இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
**நா.சண்முகரட்ணம் (சகோதரன்)**
**077 977 9716**

## மரண அறிவித்தல்

**பிறப்பு** 13 • 07 • 1961



**இறப்பு** 29 • 05 • 2020

### சின்னத்தம்பி கேதீஸ்வரன்

**(வங்கியாளர், Commercial Bank, Stanly Road.)**

நெடுந்தீவினைப் பிறப்பிடமாகவும் புதிய வீதி கொக்குவில் மேற்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கேதீஸ்வரன் கடந்த (29.05.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்துக்குமாரு மற்றும் இரத்தினம் தம்பதியரின் மருமகனும், விஜியகுமாரியின் (ஆசிரியர்-யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) அன்புக் கணவரும், குகேசன் (மொறட்டுவை பல்கலைக்கழகம், தகவல் தொழில்நுட்ப பீடம்), யேகிசன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2022 A/L) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கேதீஸ்வரியின் சகோதரனும், இரத்தினகுமார் (ஜேர்மனி), சிவகுமார் (லண்டன்) காலஞ்சென்ற சதீஸ்குமார் மற்றும் தினேஸ்குமார் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (01.06.2020) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புதிய வீதி, கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**075 5464 760**

## காணி தேவை

கோப்பாய் பிரதேச செயலகத் திற்கு உட்பட்ட பகுதியில் காணி தேவை.

தொடர்பு:- 077 164 8895

**வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**
**பதிவு இல - V/465**

**பால் பதனிடும் தொழிற்சாலை குத்தகை அடிப்படையில் வழங்குதல்**

எமது சமாசத்திற்கு சொந்தமான மரக்காரம்பளை வவுனியாவில் அமைந்துள்ள பால் பதனிடும் தொழிற்சாலையையும் அதனுடன் இணைந்த காணி கட்டடம் மற்றும் தொழிற்சாலை பயன்பாட்டுக்கான சொத்துக்கள் என்பவற்றையும் பத்து வருட காலத்தி-ற்கு குத்தகைக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கீழ்வரும் நிபந்தனைகள். அடிப்படையின் கீழ் தகுதியான ஆர்வமுடையவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. குத்தகை முற்பணமாக ஆகக் குறைந்த தொகையாக ரூபா முப்பது இலட்சம் (ரூபா 03 மில்லியன்) எதிர்பார்க்கப்படுகிறது.
02. மாத குத்தகையாக ஆகக் குறைந்தது ரூபா ஒரு இலட்சம் ரூபா 100.000) எதிர் பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு மாதமும் 7 ஆம் திகதிக்கு முன்னராக வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு மாதாந்த குத்த கைப்பணம் வழங்கப்பட வேண்டும். முதல் 5 வருடங்களின் பின்னர் குத்தகைத் தொகை மீளத்தீர்மானிக்கப்படும் என்பதோடு இறுதி 5 வருடங்களிலேயே குத்தகை முற்பணத்தை மாதாந்தம் கழித்து குத்தகையைக் கணிக்கும் முறை ஏற்படுத்தப்படும்.
03. குத்தகைக்கு பெற்றுக் கொள்பவர் வேறு நபர்களுக்கு / நிறுவனங்களுக்கு உப ஒப்பந்தம் மூலமோ அல்லது வேறு வகையிலோ கை மாற்ற முடியாது.
04. குத்தகை ஒப்பந்தம் முடிவுறுத்தல் தொடர்பிலும். பால் பதனிடும் தொழிற்சாலை தொடர்பான திருத்தம். பராமரிப்பு. ஏனைய விடயங்கள் தொடர்பிலும் தெளிவான எழுத்து மூலமான ஒப்பந்தம் ஒன்று இரு தரப்பாலும் கைச்சாத்திடப்படும்.
05. வவுனியா மாவட்டத்திலுள்ள சகல கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்துவ பண்ணையாளர்களின் பொருளாதார நலவுரித்துக்கள் பாதிக்கப்படாத வகையிலும் கிடைக்கப்பெறுவதையும் உயர்வான மட்டத்திலும் பேணப் படுவதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பால் தங்களின் தெளிவான இயலுமையை பூரணமாக வெளிப்படுத்தி எதிர்வரும் 12.06.2020 ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் எனக்கு கிடைக்கக் கூடியதாக கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு விண்ணப்பத் தினை பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மேற்படி விடயம் தொடர்பில் வவுனியா கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் இயக்குனர் சபையின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதும் ஆகும்.

**குறிப்பு 1:** இத்தொழிற்சாலை உடன் செயற்படுத்தக் கூடிய நிலையில் காணப்பட வில்லை இந்நிலையில் குத்தகைக்கு பெற்றுக்கொள்ளும் திறத்தவரே பால் பதனிடும் தொழிற்சாலையை செயற்படுநிலைக்கு மாற்றுவதற்கு ஏதுவான விடயங்களைக் கையாள வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**குறிப்பு 2:-** குறித்த தொழிற்சாலையை நேரடியாக சென்று பார்வையிட விரும்பின் தலைவர் அல்லது செயலாளருடன் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்

**தலைவர்,**
**வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**
**இல 27, பஜார் வீதி, வவுனியா, தொ.இலக்கம் : 024 222 3367**

## மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 12 . 1928

இறப்பு 24 . 05 . 2020



### இராஜேஸ்வரி கணேசரட்ணம்(பெரிய கணேசு)

யாழ் இணுவிலை பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும், லண்டனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி கணேசரட்ணம் (பெரிய கணேசு) அவர்கள் 24ம் நாள் வைகாசி 2020 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபாதம் அடைந்தார்.அன்னார், காலம் சென்ற விஸ்வலிங்கம். ரத்தினம் தம்பதிகளின் மூத்த மகளும், காலம் சென்ற கார்த்திகேசு. செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், கார்த்திகேசு கணேசரட்ணம்(பெரிய கணேசு –தவில்வித்துவான் - அளவெட்டி) அவர்களின் அன்பு மனைவியும் வெ.பவானி. கே.சௌந்திராம்பிகை, க.சந்திரோதயம். வி.கருணாமூர்த்தி மற்றும் காலம் சென்றவர்களான வி.மகாலிங்கம். லயஞான குபேரபூபதி தவில்மேதை வி.தட்சணாமூர்த்தி. வி.ராசரத்தினம், கு.வாலாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் க.சிவசூரியன்(ஜேர்மன்), காலம் சென்ற க.பாலச்சந்திரன். சி.ஜெகதீஸ்வரி (கொழும்பு). க.பூபாலன்(பிரான்ஸ்). க.இரவீந்திரன்(லண்டன்), கோ.ஜெயவதனி (லண்டன்). மு.சந்திரவதனி(அவுஸ்ரேலியா), க.பாலகுலேந்திரன்(லண்டன்), க.நவகுமாரன்(லண்டன்), சி.தசகுமாரி(மதி)(யாழ்ப்பாணம்). கு.லதாங்கி(கனடா) ஆகியோரின் அருமைத்தாயாரும் செ.சிதம்பரநாதன், காலம் சென்ற கோ.கோபாலகிருஷ்ணன். ப.முருகதாஸ், சி.சிறீதரன். கோ.குமணன், சி.கலைச்செல்வி, பா.உதயச்செல்வி. பூ.நளாயினி. பா.கௌரி. ந.பானுசிறி ஆகியோரின் அன்பு மாமியாரும்.மற்றும் பேரப்பிள்ளைகளின் பேத்தியும் பூட்டப்பிள்ளைகளின் பூட்டியும் ஆவார் அன்னாரின் பூதவுடல் 29-05-2020 வெள்ளிக்கிழமை அன்று மதியம் 1.00 மணிதொடக்கம் 03.45 மணிவரை 188 Alexandra Avenue Harrow HA2 9BN. எனும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு, ஈமக்கிரியைகள் 31/05/2020 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8 மணிதொடக்கம் 11 மணிவரை 267 Allenby Road Southall UB1 2HD எனும் முகவரியில் நடைபெற்று பின் 12 Holders Hill Road Hendon London NW7 1NB எனும் முகவரியில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

தகவல் : குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு : பாலகுலேந்திரன் – மகன் – +44 773 722 4119
நவகுமார் – மகன் – +44 753 857 4797

# தொண்டமானின் பூதவுடல் அஞ்சலிக்காக வேவண்டனுக்கு

கொழும்பு, மே 30

மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடல் கொழும்பிலிருந்து ஹெலிகொப்டரில் சொந்த ஊருக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு மக்கள், அரசியல் பிரமுகர்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் சொந்த ஊரான ரம்பொடை வேவண்டனில் உள்ள பூர்வீக இல்லத்தில் அஞ்சலிக்காக வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையிலேயே பூதவுடல் நேற்று எடுத்துச்செல்லப்பட்டுள்ளது. இலங்கைவிமானப்படைக்குச் சொந்தமான விசேட ஹெலிகொப்டரில் நேற்றுக் காலை எடுத்துச் செல்லப்பட்டது. ஹெலிகொப்டர், கம்பளையில் மைதானம் ஒன்றில் தரையிறப்பட்டு, அங்கிருந்து பூதவுடல் தரைவழியாக மக்கள் அஞ்சலியுடன் இறம்பொடை, வேவண்டனுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது அரசியல் பிரமுகர்கள் மக்கள் அஞ்சலிகளைச்செலுத்தியிருந்தனர். (ப-22)

## மண் விற்பனைக்கு உண்டு

அத்திபாரம் வெட்டிய மண் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 773 0567

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 இல் பிறந்த சுவாதி நட்சத்திரம் கிரக பாவம் 48. 7 சூரியன் செவ்வாய். படித்த மகளுக்கு தகுந்த மணமகன் தேவை. (துரகர் தேவையில்லை)

தொடர்பு:077 706 9148

# இரு கோவில்கள் உடைத்து திருட்டு

சாவகச்சேரி, மே 30

சாவகச்சேரி புறநகர்ப் பகுதியான பெருங்குளம் மற்றும் கல்வயல் பகுதிகளில் சுமார் 500 மீற்றர் இடைவெளியில் உள்ள இரு இந்து கோவில்கள் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு, அங்கிருந்த மின்சாதனங்கள் உட்பட பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை இரவு இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். சாவகச்சேரி பெருங்குளம் பிள்ளையார் கோவில் மற்றும் கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோவில் ஆகியனவற்றிலேயேதிருட்டுக்கள்இடம்பெற்றுள்ளன. இவை தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கோவில்களின் நிர்வாகத்தினர் முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் மோப்ப நாய்களின் உதவியுடன் கோவில் சுற்றாடலில் தடயங்களைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (கு-9)

## வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு
1). காசாளர் ஆண் / பெண் (A/L கணிதம், வர்த்தகம்)
2).தச்சுவேலையாள்கள் தேவை.
நிரந்தரமான வேலையும், தகுந்த சம்பளமும் வழங்கப்படும்.

**ஆர்க் தளபாட நிலையம்**
**தொடர்பு : 1169, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P: 077 300 1763**

## கோழி விற்பனைக்கு

எம்மிடம் பேரன்ஸ் கோழிகள் மொத்த மாகவும், சில்லறையாகவும் மலி வான விலையில் பெற்றுக்கொள்ள லாம்

**ஐங்கரன் பாம்**
**பிறவுண் வீதி, கலட்டி சந்தி, யாழ்ப்பாணம்.**
**T.P: 077 905 0165**

## Graduate Showroom Administrator தேவை

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிரபல அழைப்பிதழ் ஏற்றுமதி நிறுவனத்திற்கு கணினி அனுபவமுள்ள Graduate Administrator தேவை. A/L or Diploma level தகைமையுடனும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: 077 815 2693

## சொர்க்கம் திருமண சேவை

கனடாவில் வாழும் 47 வயதுடைய மணமகனுக்கும் இலண்டனில் வாழும் 37 வயதுடைய 3இல் சூரியன் செவ்வாய் உத்தர நட்சத்திர மணமகனுக்கும் மணமகள்களை தேடுகிறோம்.

**தொடர்புகளுக்கு:**
**0014 166661855**
**077 650 5097, 021 222 1515**
**www.sorkham.com**

## மரண அறிவித்தல்

### கதிரித்தம்பி வாசு
**(முகாமையாளர் மக்கள் வங்கி)**



**தோற்றம் :- 22.05.1970**
**மறைவு :- 29.05.2020**

கள்ளப்பாடு முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் புதுக்குடியிருப்பு, விசுவமடுவை வசிப்பிடமாகவும் மடத்தடி. அல்வாய் கிழக்கு, பருத்தித்துறையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி வாசு அவர்கள் நேற்று (29.05.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் கதிரித்தம்பி தங்கேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மகனும், சிறிகந்தராசா மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், சுமதி (M.A. வலயக் கல்வி பணிமனை. வடமராட்சி) அவர்களின் அன்புக் கணவரும், நர்த்தனன், மகிழையன் (மாணவன், ஹாட்லிக் கல்லூரி). ஆகியோரின் பாசமிகு தந்தையும். லோகநாயகி (UK), Dr.தேவநாயகி (தேசிய வைத்தியசாலை, கொழும்பு). கீதா (சுவிஸ்). காலஞ்சென்ற கமலநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், யூட் ரவீந்திரராஜா (UK). Dr.லோகநாதன் (காசில் வைத்தியசாலை. கொழும்பு). அருளானந்தம் (சுவிஸ்). சிவபாலன் (புதுக்குடியிருப்பு), காயத்ரி (ஆசிரியை. வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), ஆகியோரின் அருமை மைத்துனரும், முகுந்தனின் (மாவட்ட விளையாட்டு அலுவலர், முல்லைத்தீவு) அன்புச் சகலனும், சௌமியா, சானுஜா, துஷானி. அபிசாந், ஆகாஷ், அபிரா, காலஞ்சென்றவர்களான மயூரா, ஐதுர்சன், பிரவீன் ஆகியோரின் பாசமிகு மாமனும், தேனகன், பிரவிஷ்னன், சனாதனன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (31.05.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**
**0773568909**

## விற்பனையாளர் தேவை

மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி உதிரிப்பாக விற்பனையில் அனுபவம் உள்ளவரும் மற்றும் பழுதுகளை புரிந்து கொள்ளக்கூடியவரும், குறைந்தது 2 வருட அனுபவம் உள்ளவர் தேவை.

தொடர்பு:077 109 4085

## IPS Online Class

**இணைய வழி கற்பித்தல்**

G.C.E (O/L), (A/L)-2020 பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கானது

## ICT / English

- Zoom online class
- English / Tamil medium
- Pastpapers, Model papers - 15 years

**ஆரம்பம் : 01.06.2020**

**Note:-**
க.பொ.த(சா/த). (உ/த)-2020 ரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கான Zoom வகுப்புகளில் இணைவதற்கு ஆர்வமுடைய மாணவர்கள் **0766852529** தொலைபேசி இலக்கத்தி னூடாக பெயர். பாடப்பிரிவு. விவரங்களை அனுப்பிவைக்க முடியும்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 05 . 04 . 1936

மறைவு 30 . 04 . 2020

## தேசபந்து நல்லதம்பி நாகராசா

(புளியங்கூடல் மகாமாரி இந்து இளைஞர் சங்கத்தினுடைய தலைவரும், சமூகப்பற்றாளரும், ஊர்காவற்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர்)

**அன்பிற்கும் பண்பிற்கும்**
**இலக்கணமாய் வாழ்ந்து**
**எமை அவனியிலே வாழ்வாங்கு**
**வாழ வைத்த தெய்வமே!**
**நித்தமும் உங்களது ஆத்ம**
**சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.**

கடந்த (30.04.2020) வியாழக்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (30.05.2020) சனிக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் இருந்து மற்றும் உடன் வந்து உதவிகள், ஆறுதல்கள் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சேனைப்புலவு, நெடுங்கேணி, வவுனியா.

மகன், மகள், குடும்பத்தினர்
076 399 3563, 076 231 9345

## Hotel வாடகைக்கு

யாழ்ப்பாணம் கண்டி வீதி அரியாலையில் 2A/C Rooms, 7 Non A/C Rooms, Attached washrooms வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 076 293 8404

## அடகு நகை மீட்பு

நீங்கள் அடகு வைத்த நகைகளை மீட்க முடியாமல் விட்டால் மீட்டு அதற்கான பெறுமதி பணம் தரப்படும்

தொடர்பு: 077 615 1283

## வீடு விற்பனைக்கு

143. மானிப்பாய் றோட், யாழ்ப்பாணத்தில் பள்ளி வாசலுக்கு அருகாமையில் 03 அறைகள் வீடு ஒரு பரப்பில் விற்பனைக்கு உண்டு. "தரகர் தேவையில்லை)

தொடர்பு:- 077 253 9466

## வீட்டுடன் காணி விற்பனைக்கு


மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு அருகில் 4பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

077 6778359/ 077 4167634

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை கதிர்காமத்தம்பி

(இளைப்பாறிய ஆசிரியர் - BSC Dip. in. Ed - யாழ் இந்துக் கல்லூரி, கொழும்பு விவேகானந்தா மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி)



தெல்லிப்பழை விழிசிட்டியை பிறப்பிடமாகவும், திருநெல்வேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கதிர்காமத்தம்பி (இளைப்பாறிய ஆசிரியர் - BSC Dip. in. Ed - யாழ் இந்துக் கல்லூரி, கொழும்பு விவேகானந்தா மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி) நேற்று (29.05.2020) வெள்ளிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பர் கணபதிப்பிள்ளை, சண்முகம் தங்கப்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரரும் சுலோஜனாவின் ஆருயிர்க் கணவரும், Dr.வைதேகியின் (இரசாயன நோயியல் வைத்திய நிபுணர், யாழ் போதனா வைத்தியசாலை) அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சின்னத் தங்கச்சி மற்றும் சின்னத்தம்புவின் சகோதரரும் Drஇ.கேசவனின் (சமுதாய வைத்தியநிபுணர், வடமாகாண சுகாதாரத் திணைக்களம்) அன்பு மாமனாரும் நிகேதனா வின் ஆசை அம்மப்பாவும் ஜெயஸ்ரீ, ஜெயராஜா, காலஞ்சென்ற ஜெயஜீவா மற்றும் ஜெயவனா, ஜெயக்குமார், கனகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.153, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று (29.05.2020) வெள்ளிக்கிழமை மதியம் 1.00 மணிக்கு நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- Dr.வைதேகி கேசவன் (மகள்)**

## மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 11 . 1951

மறைவு 22 . 05 . 2020

### அருணாசலம் உமாபதி

யாழ்ப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை மூளாய் வீதி . இங்கிலாந்து லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் உமாபதி கடந்த (22.05.2020) வெள்ளிக்கிழமை அன்று இங்கிலாந்தில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் சித்தன்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அருணாசலம் சிவாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சீவரட்ணம் (ஓவசியர்) கனகாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும் சுலோஜனா (ராணி-Rani Mix லண்டன்) அவர்களின் அன்புக்கணவரும் கணதீபன் (திபன்). கஜதிபன்(கஜன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்கினேஸ்வரி ( Dr. V. Gopal ) அவர்களின் அன்பு மாமனாரும் தியோழுன். நேதன் ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் பரந்தாமன் ( கொழும்பு ) ஆதித்தன் ( கனடா ) தண்டபாணி ( சுவிஸ் ) அருந்ததி ( தவம் -வவுனியா ) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற புவனதேவி மற்றும் விஜயலட்சுமி ( விஜி ) கங்கா ( கனடா ) காலஞ்சென்ற கீதா மற்றும் சண்முகநாதன் ( நாதன்). ரதிவதனி. அகிலன். மஞ்சுளா. மைதிலி. சுமங்கலி. அரவிந்தி. நிர்மலா. காலஞ்சென்ற ஜெயசிங்கம் மற்றும் விக்கினேஸ்வரன். நல்லம்மா. கணேஸ்வரன் - ரட்ணஜோதி காலஞ்சென்றவர்களான நடேஸ்வரன். ஜெசிதரன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் ( கலோ நில அளவையாளர் ) மற்றும் பேரின்பநாயகி. தம்பதிகளின் அன்பு மருமகனும் கோபால் லீலாவதி ( Eastern Teading company - Colombo ) தம்பதிகளின் அன்பு சம்மந்தியும் சுகன்யா - தேவசி. ராகுலன் சாயி. பரிசுதன். சுபாஷினி. சிவானி. ஆகியோரின் அன்பு மாமாவும் வேணி - காண்மபன். திவாகர்-சுகன்யா. கோபிகா நவின். பிரதீஸ் - பிரதீபா. சதீசன்-துஸ்யந்தி. சர்மிளா-வரதன். ஜஸ்மிலா-சிவராம் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நாளை (31.05.2020) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ( லண்டன் நேரம் ) நடைபெறும் .

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்: குடும்பத்தினர்**

சுலோஜனா (மனைவி) +447970390689
கஜன் (மகன்) +447958103384
பரந்தாமன் (சகோதரன்) +94711915386
ஆதித்தன் (சகோதரன்) +15192225191
தண்டபாணி (சகோதரன்) +41787056052
அருந்ததி (சகோதரி) +94768658333
நிர்மலா (மைத்துனி) +94779716826

## மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 12 . 1928

மறைவு 24 . 05 . 2020

### கணேசரத்தினம் இராஜேஸ்வரி

யாழ். இணுவிலைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி, லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கணேசரத்தினம் இராஜேஸ்வரி கடந்த (24-05-2020) ஞாயிற்றுக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் இரத்தினம்(இணுவில்) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, செல்லம்மா (அளவெட்டி) தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு கணேசரத்தினம்(தவில் வித்துவான்- அளவெட்டி) அவர்களின் அன்பு மனைவியும், பவானி, சௌந்தலாம்பிகை, சந்திரஉதயம், கருணாமூர்த்தி, காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், தட்சிணாமூர்த்தி (தவில் மேதை லயஞான குபேர பூபதி), ராசரட்ணம், பாலம்பிகை ஆகியோரின் சகோதரியும், சிவசூரியன் (ஜேர்மனி), காலஞ்சென்ற பாலச்சந்திரன் (இலங்கை) மற்றும் ஜெகதீஸ்வரி(இலங்கை), பூபாலன்(பிரான்ஸ்), இரவீந்திரன் (இங்கிலாந்து), ஜெயவதனி(இங்கிலாந்து), சந்திரவதனி(அவுஸ்திரேலியா), பாலகுலேந்திரன் (இங்கிலாந்து), நவக்குமார்(இங்கிலாந்து), தசகுமாரி(இலங்கை), லதாங்கி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயா ரும், சிதம்பரநாதன், காலஞ்சென்ற கோபாலசாமி மற்றும் முருகதாஸ், சிறிதரன், குமணன், கலைச்செல்வி, உதயச்செல்வி, நாளாயினி, கௌரி, பானுமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், எழிலரசி, துசியந்தினி, கஜிவன், ஜலதரன், கீதாலயன், லலிதவாகினி, பிரபாகினி, சீரியா, தர்சா, அனித்தா, ஜகரன், நீதினி, தூயவன், வேந்துயன், வேந்தினி, காலஞ்சென்ற கஜேந்திரன் மற்றும் உமையவன், கனித்ரா, விதுர்லா, கார்த்திக், கஜேசன், நிவேதன், சுவேதன், அக்ஷயா, கரிசாத், கனுயா, நிரோஜன், குருசாந்தன், மதுசா, நிகுந்தன், வைஷாலி, விதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கரீஸ், பிரவீன், பிரதீஸ், சுதர்சன், கிசானி, யாதவன், சயானிக்கா, காத்மிகா, அபிராம், சுவாரஜன், கரீஸ், வர்சா, ரோஜித், தீஜெய் கயால் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (31-05-2020) ஞாயிற்றுக்கிழமை 1.00 pm - 3.00pm இலண்டன் நேரம் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:-**

**இருபாலை வீதி, கோண்டாவில். சிறிதரன் தசகுமாரி (மதி) குடும்பத்தினர்**

076 372 5367 - சிறிதரன் , 0044 7538 574797 - நவகுமார்
0044 7737 224119 - பாலகுலேந்திரன், 0044 7525 784346 ஜெயவதனி

## தேவை

பரந்தனில் உள்ள கட்டட பொருள்கள் விற்பனை செய்யும் நிலையத்திற்கு ஆண் ஒருவர் தேவை.

தொடர்பு:- 077 025 6640

## விற்பனைக்கு

6'9 கல், சல்லி, டஸ்ற், கலவன், ABC மற்றும் கிரவல், மணல் ஆகிய கட்டட தேவையுள்ள பொருள்கள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:- 077 288 7574

## விற்பனைக்கு உண்டு

எம்மிடம் கோதுமை, தவிடு, சோளம், கடலைக் கோது, மைசூர் கோது, கலந்து உருண்டை வடிவில் தயாரிக் கப்பட்ட கோமாதாவிற்கான கலவை விற்பனைக்கு உண்டு.

விலை-40kg-1600/-

தொடர்புகளுக்கு:-
077 429 1629

## வாகனம் வாடகைக்கு உண்டு [வான்]

TOYOTA, TOWNACE (Lotto வான்)சாரதி யுடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 945 7019

## வீடு விற்பனைக்கு உண்டு

இணுவில் துரைவீதி. றோட்டில் இருந்து தெற்கே வன்னிய சிங்கம் றோட்டில் ஒரு பரப்பில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. 3 அறைகள், வடக்கு வாசல், விலை பேசித் தீர்மானிக்கலாம்.

076 610 6539, 021 561 1243

## தேவை

யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள பூமரம் விற்பனை செய்யும் நிலையத்திற்கு பொறுப்பாக கவனிக்கக் கூடிய அனுபவம் உள்ள ஆண் ஒருவர் தேவை.

தொடர்பு:- 076 826 7703

## மணமகள் தேவை

பதிவுத்திருமணம் மட்டும் செய்து ஒரு வருடத் துக்குள் விவாகரத்து ஆன யாழ். இந்து கௌரவ குடும்பம் அரச உத்தியோகம் பார்க்கும் 1984 ஆம் ஆண்டு பிறந்த அத்தம் நட்சத்திரம் உடைய மணமகனுக்கு மண மகள் தேவை.

தொடர்பு: 077 268 0298




# மருத்துவர், தாதியரை மிரட்டும் கொரோனா

## சுகாதார சேவையாளர்கள் 291 பேர் அமெரிக்காவில் இறப்பு

நியூயோர்க், மே 30

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் ஆயிரக்கணக்கான மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியிுள்ளனர் என்று அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றுக்குள்ளான 62 ஆயிரத்து 344 சுகாதார சேவையாளர்களில்,குறைந்தது 291 பேர் உயிரிழந்துள்ளார்கள் என அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது. இந்த எண்ணிக்கை உண்மையில் அதிகமாக இருக்கலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.

பாதிப்புகள் குறித்த பல அறிக்கைகளில் பாதிப்புக்குள்ளான நபர் சுகாதாரப் பணியில் பணியாற்றினாரா என்பதை சேர்க்கவில்லை. அதனால் அவை கணக்கிடப்படவில்லை எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கடைசியாக ஏப்ரல் 15 இல் வெளியான கொரோனா தொற்றுக்குள்ளான சுகாதார சேவையாளர்களின் எண்ணிக்கை உயர்ந்து காணப்பட்டது. அந்த நேரத்தில், கொரோனாவால் பாதிக்கப்பட்ட சுகாதாரப் பணியாளர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 282 ஆக இருந்துள்ளது.

அமெரிக்கா முழுவதும் உள்ள சுகா தார சேவையாளர்கள் பல மாதங்களாக தங்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் கிடைக்கவில்லை என்று குற்றசாட்டியிருந்த நிலையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. (எ)

# ஆள்துளைக் கிணற்றில் வீழ்ந்து 3 வயதுச் சிறுவன் உயிரிழப்பு!

புதுடில்லி, மே 30

இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தில் ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த 3 வயது சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள் ளான். இந்தியாவின் தெலுங்கானாவின் மேடக் மாவட்டத்தை சேர்ந்த சிறுவனின் தந்தை விவசாய நிலத்தில் கடந்த வாரம் 3 ஆழ்துளை கிணறுகளை தோண்டியுள்ளார். அதில் தண்ணீர் கிடைக்காததால் அதை மூடி விடுவதற்கான பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார், அவரது குடும்பத்தினரும் அங்கு உடனிருந்தனர்.

அப்போது யாரும் எதிர்பாராத விதமாக, அங்கு விளையாடிக்கொண்டிருந்த 3 வயது சிறுவன் 120 அடி ஆழமுள்ள ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்துள்ளான். சிறுவனின் குடும்பத்தினர் பொலிசாருக்கும், தீயணைப்புத் துறைக்கும் தகவல் கொடுத்தனர். அங்கு விரைந்து வந்த பொலிஸாரும், தீயணைப்பு வீரர்களும் சிறுவனை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். போர்வெல் இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டு சிறுவன் விழுந்த ஆழ்துளை கிணறு அருகே மற்றொரு கிணறு தோண்டப்பட்டது. இரவு நேரமானதால் விளக்குகள் பொருத்தப்பட்டு மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்றன. நேற்றுக் காலை சிறுவன் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டான். இந்தச் சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ)


## மரண அறிவித்தல்



### செல்வி ஆ.மாரிமுத்து

பண்ணாகம் சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஆ.மாரிமுத்து (ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் சங்கானை, பிரதேச செயலகம், யாழ் கல்வி வலயம்) நேற்று (29.05.2020) வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் திரு.திருமதி ஆசைமுத்து கனகமணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் செல்வி ஆ.கனகாம்பிகை (அமரர்), திருமதி செ.அல்லிராணி (ஓய்வுநிலை ஆசிரியர், யா/வேம்படி மகளிர் கல்லூரி), திரு. ஆ. சுதாகரன் (ஜேர்மனி), திருமதி அ.பிரபாகரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு.தி.செல்வநாதன் (அமரர்), திருமதி சு.பிறேமரஞ்சினி (ஜேர்மனி), திரு.ந.அருட்சோதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், திரு.செ.பிரவீனின் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் நீர்ப்பாசன திணைக்களம், வவுனியா) அன்பு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2020) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சத்தியக் காடு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 615 4843



கோலாகல திறப்பு விழா

யாழ் நகரில்
கடந்த 1974ஆம் ஆண்டில்
இருந்து தரமான ருசியுடன்
பாரம்பரிய கைப்பக்குவமும்
இணைந்த என்றும் நாவில்
மறவா சுவைப்பிரியர்களின்
நன்மதிப்பை பெற்ற
நிக்கோ கோப்பி நிறுவனம் மீண்டும்...

New RICOH
றிக்கோ Coffee

எதிர்வரும் 01.06.2020 திங்கட்கிழமை
காலை 9.00 மணிமுதல் 10.30 வரை உள்ள சுபவேளையில்
கோலாகலமாக திறந்து வைக்கப்படும்

சமையல் வேலை தெரிந்த ஆண்/பெண் இருபாலாரும் வேலைக்கு தேவை. Tea Maker மற்றும் சிற்றுண்டி உணவு தயாரிப்பாளர் (ஆண்கள்) மருத்துவ சான்றிதழ் பெற்றிருந்தவர்கள் விரும்பத்தக்கது

உங்கள் இல்ல சுப விசேடங்களுக்கு தேவையான சிற்றுண்டி வகைகள், உணவு வகைகள் மற்றும் ஐசிங் கேக் என்பவற்றை ஓடரின் பெயரில் குறித்த நேரத்தில் செய்து தருகின்றோம்.

282 B, Hospital Road , Jaffna
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2054 077 623 8129


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.